Registered at the G. P. O. as a Newspaper வாரப் பதிப்பு விலை சதம் 15

# ஈழநாடு

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்

டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

தேசிய தினசரி National Tamil Daily
போன் 389
தபாற் பெட்டி எண் 49
மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி கார்த்திகை 28 ஆம் நாள் ஷஃபான் பிறை 8 (13-12-64) ஞாயிற்றுக்கிழமை இதழ் 0

பத்திரிகை கமிஷன் சிபார்சுகள் ★ இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் ★ ஜனநாயக ரீதியில் அரசாங்கம்

# மொழிப்பிரச்னை: புதிய வகையில் தீர்க்கப்படும்

## சிறுபான்மையினர் கஷ்டங்களை நீக்கவும் நடவடிக்கை எடுப்பேன்

### சுதந்திரக்கட்சி மகாநாட்டில் சிறிமா உறுதி

கண்டி, சனி

"மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் வெற்றிகிடைத்த பின்னர் நாம் மொழிப் பிரச்னைக்குத் தீர்வுகாண்போம். சிறுபான்மை இனத்தவர்களை இப்பொழுது எதிர் நோக்கியுள்ள கஷ்டங்களையெல்லாம் தீர்ப்பதற்கான புதிய சூழ்நிலைகளை ஏற்படுத்தும் சௌஜன்ய நிலையை உண்டாக்கி முற்றிலும் புதிய வகையில் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க நடவடிக்கைகள் எடுப்பேன்" என்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 12-வது மாநாடு இன்று காலை கண்டியிலுள்ள புஷ்பதான மகா வித்தியாலயத்தில் ஆரம்பமானது. மகாநாட்டுக்குத் தலைமைவகித்த பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தமது தலைமையுரையில் தான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்த மகாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை முடிவடையும்.

பிரதமர் சிறிமா தொடர்ந்து பேசுகையில், மொழிப் பிரச்னையால் சிறுபான்மையோர் கஷ்டமடைவதாகவிருந்தால் அந்தப் பிரச்னை அவர்கள் விரும்பத்தக்க முறையில் நல்ல சூழ்நிலையில் தீர்த்து வைக்கப்படும் என்று கூறினர்.

**தடையாக பலர் இருந்தனர்**

"இதுவரை காலமும் இலங்கையின் தென்மாகாணத்திலும் வடக்கு மாகாணத்திலும் மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இடையூறாகப் பலர் இருந்தார்கள் ஆனால் நல்ல சமூக அடிப்படையில்மொழிப்பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளவே நாங்கள் விரும்புகின்றோம்" என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

**உறுதிகூறுகின்றேன்**

மொழி பிரச்னை நல்லமாதிரி தீர்த்துவைக்கப்படும் என்று நம்பிக்கை தெரிவிக்க பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெற்றதும் இதற்கான வகையில் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்

**சிங்கள மொழி**

"கடந்த காலத்தில் சிங்கள மொழிக்கு தேசிய மொழி என்ற அடிப்படையில் அதை [illegible] பற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன அதே சமயத்தில் நியாயமான அளவு தமிழ் மொழி உபயோகத்துக்கும் அரசாங்கம் வழிவகுத்தது" என்றும் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

**இலங்கை-இந்திய ஒப்பந்தம்**

"இலங்கை இந்தியர் பிரச்னையைத் தீர்த்துவைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் திருப்திகரமானவையே

(10-ம்பக்கம் பார்க்க)

### இலங்கை 7 விக்: 158 ரன்கள்

பெங்களூர், டிச 2

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே இங்கு நடைபெறும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் இன்றைய ஆட்டமுடிவில் இலங்கை 7 விக்கெட் நஷ்டத்திற்கு 158 ரன்கள் எடுத்தது

இந்தியா தன் முதலாம் இன்னிங்ஸில் 4 விக்கெட் நஷ்டத்திற்கு 518 ரன்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. வனுமங்கி 141 ரன்கள் எடுத்து அவுட் ஆகாமலிருக்கிறர்.

### மற்றொரு எம். பி. ராஜினாமா

கொழும்பு, ஞாயிறு

தலவாக்கலை எம். பி. திரு லயனல் டி. எஸ். குணசேகரா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து ராஜினாமா செய்து, திரு சி. பி. டி. சில்வாவின் புதியகட்சியில் சேர்ந்துள்ளார். இவருடன் இதுவரை 14 எம். பி. க்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகியுள்ளனர்.

### குளிக்கச்சென்றவர் மரணம்

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறையைச் சேர்ந்த தில்லையம்பலம் வேலுப்பிள்ளை என்பவர் ஆலடி பிள்ளையார் கோவில் குளத்தில் குளிக்கச் சென்றபோது தவறி விழுந்து மரணமடைந்தார். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு வி. பி. இராசரத்தினம் மரணவிசாரணை நடத்தி தற்செயல் மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் திரு. சுந்தரலிங்கம்

### ஜி. ஜி.க்கு முழு ஆதரவு அளிப்பதாக வாக்குறுதி

யாழ்ப்பாணம், திங்

நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில், முன்னை வவுனியா எம். பி.யும் ஈழம் முன்னணி தலைவருமான திரு. சி. சுந்தரலிங்கம், எதிர்பாராத விதமாக திடீரென சமுகமளித்து, எதிர்வரும் பொதுத் தேர்தலில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு தனது முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் அளிக்கவிருப்பதாக வாக்குறுதியளித்தார்.

தமிழ்காங்கிரஸின் நிர்வாக சபை கூட்டத்திற்கு முன்நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தான் இச்சம்பவம் நடைபெற்றது. இரு கூட்டங்களுக்கும் திரு. ஆர் என் சிவப்பிரகாசம் தலைமைவகித்தார்.

திரு சி சுந்தரலிங்கம் பேசுகையில் கூறியதாவது: திரு. ஜி ஜி பொன்னம்பலம், மற்றவர்களுடன் சேர்ந்து தமிழினத்திற்கு விடுதலையைப் பெற்றுத் தராவிட்டால் தமிழினம் ஈழத்தில் அழிந்து ஒழிந்துவிடும். தமிழினம் இந்த நிலைக்கு வந்ததற்கு தமிழரசுக்கட்சியே காரணம்.

தென்னிலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், [illegible], தமிழ் மாகாணத்தில் தமிழரசுக்கட்சியும், மீண்டும் தெரிவுசெய்யப்பட்டால் இலங்கை மக்கள் எல்லோரும் துன்பமடைவார்கள் எதிர்காலம் கடசிகளில் தங்கியிருக்கவில்லை. தமிழினத்தின் ஒற்றுமையில்தான் தங்கியிருக்கிறது.

**போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம்**

தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும், ஈழம் முன்னணிக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சில தொகுதிகளில் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்படுமென அறியப்படுகிறது. முக்கியமாக, யாழ்ப்பாணம், வவுனியா, சாவகச்சேரி, உடுப்பிட்டி, கிளிநொச்சி ஆகிய தொகுதிகளில், போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்படுமென தெரியவருகிறது ஈழம் முன்னணி போட்டியிடாத மற்றத் தொகுதிகளிலும், தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்களை, ஈழம் முன்னணி ஆதரிக்குமெனவும் தெரியவருகிறது.

## நிர்வாக சபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்ட விஷயங்கள்

யாழ்ப்பாணம் திங்கள்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொது நிர்வாகசபைக் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றபொழுது பல அங்கத்தவர்கள் தங்கள் தொகுதியின் நிலைமை பற்றிக் கூறினர்கள்.

யாழ்ப்பாணம் உயர் கலை மண்டபத்தில் திரு ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சில தொகுதிகளைத் தவிர மற்ற எல்லா தொகுதிகளுக்கும் தமிழ் காங்கிரஸ் போட்டியிடவேண்டுமென பலர் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்,

இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் தமிழ் காங்கிரஸ் பொது கூட்டம் ஒன்று நடத்துவதுபற்றியும், அடுத்த வாரம் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் நிர்வாக சபைக் கூட்டத்தில் பல முக்கிய விஷயங்கள் பற்றி முடிவு செய்யப்படவேண்டுமெனவும் ஆலோசிக்கப்பட்டது.

தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்களை தெரிவு செய்யு முன், பல விஷயங்களையிட்டு முடிவு செய்ய வேண்டுமென்றும் இதற்கென ஒரு விசேஷசபை அடுத்த நிர்வாகசபை கூட்டத்தில் தெரிவு செய்யப்படவேண்டுமென்றும் கொழும்புக் கிளையிலிருந்து வந்த ஒருவர்தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சில தொகுதிகளில் திரு சி சுந்தரலிங்கத்தின் தலைமையிலுள்ள ஈழம் முன்னணியுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்வதுபற்றியும், கிளிநொச்சி எம் பி திரு ஏ சிவசுந்தரம், தமிழ் காங்கிரஸில் சேர்ந்தால் அவரை தமிழ் காங்கிரஸ அபேட்சகராக நிறுத்துவதுபற்றியும், உடு

(10-ம் பக்கம் பார்க்க)


தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
40, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

ராஜா குரு தைலம்


240, வியாதிகளுக்கு மகா சஞ்சீவி
தலையிடி, ஜலதோஷம், கபாலஇடி
வயிற்றுவலி, பல்வலி, விஷக்கடி
இருமல், நெஞ்சுச்சளி வாதம்
வலிப்பு, ஜன்னி, வாய்வுப்-
பிடிப்புகள் முதலிய சகல
வியாதிகளுக்கும் சிறந்தது.
எஸ். சுப்பிரமணியம் அன் கோ
100, செட்டியார் தெரு, கொழும்பு.
53, கே. கே. எஸ். ரேட், (போன்541) யாழ்ப்பாணம்.

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி ?

"அத்திரி" எழுதுகிறார்

[13-12-1964 தொடக்கம் 19-12-1964 வரை]

### மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) இந்தவாரம் தொழில் முயற்சிக்கு அனுகூலமான காலம். வாக்குச் சாதுரியத்தினால் பல காரியங்களைச் சாதிப்பீர்கள். செவ்வாய்க்கிழமையளவில் ஒரு முக்கிய திருப்பமொன்று உங்கள் வாழ்க்கையில் ஏற்படும். குழந்தைகளின் தேகசுகம் இந்த வாரத்தில் பாதிக்கப்படும். கணவன்மனைவியிடையே இந்த வாரம் சுமுகமான சூழ்நிலைகள் ஏற்படும். விவாகமாகாதவர்களுக்கு நண்பர்கள் மூலம் சந்தோஷம் ஏற்படும்.

### இடபம்

(கார்த்திகை 2, 3, 4-ம்பாதத்திலும், ரோகிணி மிருகசீரிடம் 1, 2-ம் பாதத்திலும் ஜனனமானவர்களுக்கு) இந்தவாரத்தில் உறவினர்களை நம்பியிருக்கக் கூடாது. நீங்கள் கொடுத்து வைத்த பொருளையே திரும்பப் பெறமுடியாத நிலையிலிருப்பீர்கள். சொந்தக்காரர்களுடைய தொல்லை அதிகரிக்கும். குடும்பத்தில் உள்ளவர்களுடைய தேகசுகம் பாதிக்கப்படும். வியாழக்கிழமை உங்களுக்கு அனுகூலமான நாள். கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் இந்த வாரத்தில் அதிக தொல்லைகளைத் தரும்.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4-ம் பாதத்திலும், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதத்திலும் ஜனனமானவர்களுக்கு) முன்னின்று உதவிய நண்பர்கள் இந்தவாரம் பின் தங்கி நிற்பார்கள். உங்களுடைய கைப்பணத்தை எண்ணிப் பார்த்து செலவு செய்யவும். வார இறுதியில் அதிகமான செலவினங்கள் வந்து சேரும். அநாவசியமான பொறுப்புக்களை ஏற்கக் கூடாது. முன் ஏற்பட்ட கடன்களை இந்த வாரத்தில் தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படும். சனிக்கிழமை உங்களுக்கு நெருக்கடியான நாள்.

### கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதத்திலும், பூசம் ஆயிலியத்திலும் ஜனனமானவர்களுக்கு) எந்த விஷயத்தையும் சாந்தமான மனநிலையுடன் கவனிக்கும் தகுந்த பரிசீலனைக்குப் பின் காரியங்களில் ஈடுபடவும். கிடைக்கும் வாய்ப்புக்களையும் தருணங்களையும் தவறவிடாதீர்கள். நண்பர்களுடைய பொருளுதவியை நாடாதீர்கள். அதனால் பின்னுக்கு சோலி ஏற்படக்கூடும். எந்த விஷயத்தையும் சுயபுத்திகொண்டு நடத்துவது நல்லது. மற்றவர்களுடைய புத்தியை நம்பியிருக்கக் கூடாது.

### சிங்கம்

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) பெரும் கொண்ட காரியங்களில் தலை போடாதீர்கள். மற்றவர்களுக்குப் புத்திசொல்லப் போகாதீர்கள். வீண்விவாதங்களில் ஈடுபடாமலிருப்பது நன்மை. சிநேகிதர்களுடன் மட்டுடன் நடந்துகொள்வது நல்லது. குடும்பத்தில் உங்களைத் தப்பாக நினைத்துக்கொண்டு தொல்லை தருவார்கள். கணவன் மனைவியிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்பட்டு அதனால் நிம்மதி குறையும். பொறுமையுடன் நடந்துகொள்வது நல்லது.

### கன்னி

(உத்திரம் 2, 3, 4-ம் பாதங்களிலும், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்த ராசிக்காரர்கள் இவ்வாரத்தில் மன நிம்மதியாக இருக்கமுடியாது. எந்த விஷயத்திலும் அவசர புத்தியுடன் நடந்துகொள்வார்கள். இவர்களுக்கு எதிர்பாராத பிரயாணங்களும் செலவுகளும் ஏற்படும். நீசருடைய தொந்தரவு உங்களை வாட்டும். கொடுக்கல் வாங்கல் பிணக்குகளை சுமுகமாகத் தீர்க்க முயற்சித்தாலும் அனுவசியமாக இழுபட்டுக் கொண்டேபோகும். சிநேகிதர்களுடைய தொல்லைகளும் இந்தவாரத்தில் இருந்துகொண்டேயிருக்கும்.

### துலாம்

(சித்திரை 3, 4-ம் பாதங்களிலும் சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனித்தவர்களுக்கு) இந்த வாரத்தில் நீங்கள் மிகவும் சாவதானமாக் நடந்து கொள்ளவேண்டும். எப்பொழுதும் எதிரிகள் உங்களைப் பின்தொடர்ந்தேயிருப்பார்கள். நீங்கள் எதிர்பாராத விதமாக காரியங்கள் தடைப்படும். எதிர்பாராத செலவினங்கள் உங்கள் பணப்பையை வரட்டும். பிணக்குப் போகும் வழக்கத்தை இந்த வாரத்தில் கைவிடுவது நல்லது. சகோதர வழியால் அற்ப உதவியுண்டு. ஆனால் சமயத்திற்கு ஒன்றும் உதவமாட்டாது.

### விருச்சிகம்

(விசாகம் 4-ம் பாதத்திலும், அனுஷம், கேட்டையிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய திட்டங்களை இந்த வாரத்தில் ஆரம்பிப்பது நல்லது. ஏதாவது உடன்படிக்கை செய்துகொள்வதென்றால் இந்த வாரத்தில் செய்துகொள்வது மிகவும் நல்லது. நுணுக்கமாகப் பரிசீலனை செய்து கொண்டு எந்தக்காரியத்தையும் தைரியத்துடன் செய்து முடிக்கவும். எந்தவிஷயத்திலும் வெற்றி கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இந்தவாரத்தில் அதிகமுண்டு.

### தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) இந்தவாரம் மிகவும் மந்தமானது. எந்த விஷயத்தையும் ஆராய்ந்து அவதானித்து நிதானமாகச் செய்யவும். எந்த விஷயத்திலும் பொறுப்பாக ஈடுபடவேண்டாம். வேண்டாத காரியங்களில் தலையிடுவதை இந்த வாரத்தில் கைவிடவேண்டும். முன் அனுபவப்பட்ட காரியங்களில் திரும்பியும் ஈடுபடும்போது மிகவும் அவதானமாக நடந்துகொள்ளவும். சனிக்கிழமை உங்களுக்கு ஒரு முக்கியமான நாள். அன்று முக்கியமான காரியமொன்றில் ஈடுபடவேண்டி நேரிடும்.

### மகரம்

(உத்திராடம் 2, 3, 4-ம் பாதத்திலும், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதத்திலும் ஜனனமானவர்களுக்கு) எந்த விஷயங்களிலும் முன்னுக்கு வந்துநில்லுங்கள். மற்றவர்களுக்கு இடம் கொடாமல் நடந்து கொள்ளுங்கள். மனத்தைரியத்துடன் எண்ணிய கருமங்களைச் செய்து முடியுங்கள். இதனால் பின்னுக்கு நன்மையுண்டு. மற்றவர்களுடைய சொல்லுக்காக பயந்து பின்தங்கி நின்றீர்களானால் பெரும் பொருள் நஷ்டமடைவீர்கள். சிநேகிதர்களுடைய உதவியிருந்தாலும் அதில் முழுக்கத் தங்கியிருக்கக்கூடாது.

### கும்பம்


(அவிட்டம் 3, 4-ம் பாதங்களிலும் சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதத்திலும் ஜனனமானவர்களுக்கு) எந்தவிஷயத்திலும் மனத்தைரியத்தைக் கைவிடாதீர்கள். உங்கள் உறவினர்கள் சிலர் உங்களைப் பிழையான வழியில் இழுத்துச் செல்லப் பார்ப்பார்கள். பணவிஷயமாக வார ஆரம்பத்தில் சங்கடப்பட்டாலும் வார இறுதியில் நிலைமை சீரடைந்துவிடும். நீங்கள் எதிர்பார்த்த உதவிகள் சமய சந்தர்ப்பங்களுக்கு வந்து சேராது. எந்தவிதமான செலவையும் கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடுவீர்கள்.

### மீனம்

(பூரட்டாதி 4-ம் பாதத்திலும் உத்திரட்டாதி, ரேவதியிலும் ஜனனமானவர்களுக்கு) இந்தவாரம் புதுமுயற்சிகளுக்கும் புதுத் தொழில்களுக்கும் உகந்ததாக இருக்கும். சமயோசிதமான சிந்தனைகளும், சமயோசிதமான நடவடிக்கைகளும் உங்களுக்கு இந்தவாரத்தில் இருக்கவேண்டும். உற்சாகமான மனப்பான்மையைக் கைவிடாமல் தைரியத்துடன் எந்தக் காரியத்தையும் கையாள வேண்டும். வயதில் முதிர்ந்தவர்களுடைய சொல்லை அனுசரித்து நடந்தீர்களானால் நன்மையுண்டு. எந்த விஷயத்தையும் தாமதிக்க விடாதீர்கள்.


## பாதங்களுக்கு இலஸ்டோ

காலணிகள் அளிக்கும் பாதுகாப்பு அவசியமானதே



வெறுங்காலில் நடப்பதனால் கூர்மையான கற்களினாலோ, மற்றும் பொருட்களினாலோ, பாதங்கள் வெட்டுபடக்கூடும். கிருமிகள் உட்பிரவேசித்து தொற்று நோய் பரவ ஏதுவாகும்.

மலர் இதழ் போன்ற பஞ்சு மெத்தை சொகுசுள்ள இலஸ்டோ காலணிகள் அணியுங்கள். பாதங்களை குளுமையாக வைத்திருக்கும் இலஸ்டோ காலணிகள் காற்றைப்போல் கனக்குறைவானவை, வளையுந்தன்மையுடையவை, நீடிய பாவனைக்கு உத்தரவாதம் பெற்றவை.




இலஸ்டோ போம்ட்ரெட்ஸ்

47/65


## நாதசுர மேதை (9-ம் பக்கத் தொடர்ச்சி)

னால் அழகுபடுத்தியும் ராக தேவதையின் நடமாட்டத்தை நிதர்சனமாகக் காட்டித் தந்தவரும் அவரே. அன்னார் பெற்றிருந்த இசைத்திறன் ஆற்றல்கள், நய தேசிய ராகங்களை சிறப்புடன் வாசிக்க உதவிற்று.

இராகம் வாசிக்கும் போது அதனுடைய சாயல் சிறிதும் மாறாது மந்தர ஸ்தாயியிலிருந்து தாரஸ்தாயி வரை மேலும் கீழுமாக துரிதகாலங்களில் சூட்சுமப் பிரஸ்தாரங்களைச் செய்துகாட்டப் பலரும் தயங்கியபோது அவற்றை செவ்வனே நாதசுரத்தில் கையாண்டு ரசிகர்களின் இசையின்பத்திற்கு மேலும் உதவினார். திரு. ராஜரத்தினம் பிள்ளை வாசிக்கும்போது அவருடைய கற்பனை மனோவேகத்தைவிட வேகமாகவே காணப்படும். அவருடைய கற்பனை அபரிமிதமானது.

ராஜரத்தினம் பிள்ளையினால் பல இராகங்கள் பெருமை பெற்றன. ராஜரத்தினம் பிள்ளைக்காகத் தோடியா அல்லது தோடிக்காக ராஜரத்தினம் பிள்ளையா என்று வியந்தவர் எண்ணிக்கை அளப்பரிது. அவ்வாறு தோடி ராகமும் ராஜரத்தினம் பிள்ளையும் ஒன்றுபட்டுப் பின்னிப் பிணைந்து ரசிகர்களின் காதுகளில் இன்னொலிகிளப்பிய நிலையை எய்தினர். இதனால் திரு. ராஜரத்தினம்பிள்ளை மறைந்து எட்டு ஆண்டுகளாகிவிட்டபோதிலும் அவருடைய நாதசுர வாசிப்பின் ஒலி இன்றும் நம் காதுகளில் ரீங்காரமிடுகின்றது.

நாதசுர வாசிப்பில் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி வாழ்ந்த அவர் இலங்கையில் சங்கீதக் கலைக்குச் செய்த பணிகளும் பல. அவர் செய்த பணிகளின் விளைவுதான் இன்று இலங்கையின் சில இடங்களில் நாதசுரம் இன்னொலியாய் பரவுகிறது. பல மாதங்களைத் தொடராகத் தங்கி ஈழத்துக் கலையுலகில் மறுமலர்ச்சியைப் புகுத்திய ராஜரத்தினம்பிள்ளையை நாம் மறக்கமுடியாது. அடிக்கடி வந்து நாதசுரக் கச்சேரிகள் செய்து எமது சமூகத்தினருக்கு ஊக்கமும் பேராதரவும் தந்தவர் அவர்.

அவர்செய்த அரும் பெரும் பணிகளைப் பாராட்டி நாமும் இசைத்துறையில் தொண்டாற்ற முன்வரவேண்டும். ராஜரத்தினம்பிள்ளையின் விடாமுயற்சியும் அபரிமிதமான சாதகமும்தான் அவருடைய உயர்ந்த நிலைக்குக் காரணமாக அமைந்தன. அதுபோலவே நாமும் நமது இசைக்கலையை வளர்க்கும் ஆவலுள்ளவராகி விடாமுயற்சியுடன் சாதகஞ் செய்து இசைக்கலையின் நாதசுரத்தில் இனிய கானத்தை ரசிகர்களுக்குப் பெருவிருந்தாய் வழங்கவேண்டும். பண்டித பாமர ரசிகர்களை எம்பால் கவர்ந்துகொள்ளும் வகையில் நாதசுர வாசிப்பில் பல சாதனைகளை செய்துகாட்ட வேண்டும். இந்த நிலை ஈழத்தில் ஏற்படும்போது சங்கீதம் உயரும். திரு. ராஜரத்தினம்பிள்ளை ஈழத்து இசை வளர்ச்சிக்குச் செய்த பணிகளை நாம் மறந்துவிடாது சங்கீதத்தை வளர்க்க முயல்வோம். இந்த எண்ணம் இசைத் தொழில் பூண்டுள்ளோர் உள்ளத்தில் வேரூன்ற வேண்டும்.

பைந்தமிழ்ப் பூங்கா-4

# செல்வம் கொழிக்கும் செந்தமிழ்நாடு

## இல்லையென்று இரப்போரையும் அன்றும் உடையதாக இருந்தது

— செல்வி க. பூரணம் —

சென்ற பைந்தமிழ் பூங்காவில் மறுமை இன்பத்திற்கான அருள்வேண்டி முருகன்மேல் நக்கீரரால் பாடப்பட்ட திருமுருகாற்றுப் படையைப்பார்த்தோம். இம்முறை இம்மை இன்பத்துக்கான பொருள் வேண்டிப் புலவர்களால் மக்கள் மேல் பாடப்பட்ட ஆற்றுப் படைகளைச் சிறிது நுகர்வோம்.

போர்க்களம்பாடும் பொருநராற்றுப்படை 248 வரிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆக்கப்பட்டது. இந்நூலாசிரியர் முடத்தாமக்கண்ணியார் சோழன் கரிகாலனுடைய கொடை, வீரம், அரசியல் ஆகியவற்றை விளக்கிச் செல்கிறார்.

சோழநாட்டு மக்களின் வாழ்க்கையில், கலைகள், சோழநாடு சார்ந்த இயற்கைச் செல்வங்கள், வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியின் பெருமை ஆகியவற்றைப் புலவர் அழகாக எடுத்துக்கூறுவதை இந்நூலில் பரக்கக்காணலாம்.

பண்டைக்காலத்தில்பரிசிலர் தங்கள் துணைவியரோடு சென்று ஆடியும்பாடியும் தமது கலைத்திறம்காட்டி பரிசில்பெறுவது வழக்கம். பொருநராற்றுப் படையில் காணப்படும் அழகான வருணனைகளில் ஒன்றைநோக்குவோம். "பெண் மயிலைப் போன்ற பாடினி வருந்து நாயின் நாப்போன்ற பெருந்தகு சீறடியால் சாதிலிங்கத்தை உருக்கி வார்த்தாற் போன்ற செந்நிலத்தே நடந்து சிந்தை கலங்கினாள். சுக்கான் கற்கள் உறுத்தி அவள் கால்களிலே கொப்புளங்கள் தோன்றின. மரல் எனும் பழங்களைப் போல நீர் மொக்கிளித்த அந்தக் கொப்புளங்கள் அவள் நடையைத் தடுத்தன. பாடுவோரின் பாட்டுக்கேற்ப நடைபோடும் யானைகள் வாழும் அந்தக் காட்டிலே அவள் நடக்கமுடியாமல் நின்றுவிட்டாள். இலை உதிர்ந்த ஒரு மரத்தின் அடியிலே வலைவிரித்தது போன்ற நிழலிலே சிலையாக அவள் அமர்ந்துவிட்டாள். காடுறை தெய்வத்தை வணங்கிய பிறகு கானம் இசைக்கத் தொடங்கினாள் என வருகிறது.

கரிகால் பெருவளத்தான் காலத்திலே இசைக்கலை சிறந்து மிக்கோங்கியிருந்தது. இசைக் கலைக்கேற்ற கருவிகளைத் திறம்படச் செய்யும் ஆற்றல் பண்டைத் தமிழர்களுக்கு இருந்தது. இவ் ஆற்றுப்படையில் காணும் யாழ் பற்றிய வருணனை எடுத்துக் காட்டாகும். மணமகளை அலங்கரித்தது போன்ற பாலை யாழ் தெய்வப் பொலிவோடு விளங்குகிறது. பாலை யாழின் ஓசையைக்கேட்டவுடன் வழிப்பறி செய்யும் கள்வர்களும் தங்கள் கொலைக் கருவிகளைக் கைவிடுவார்கள். யாழின் ஓசை அவர்களது இரக்கமற்ற இதயத்திலும் ஈரத்தைப் பாய்ச்சிவிடும்.

"மணங்கமழ் மாதரை
மண்ணியன்ன
அணங்கு மெய்ந்நின்ற
அமைவரு காட்சி
ஆறு அலை கள்வர்
படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும்
மருவு இன்பாலை"

தமிழர்கள் மிகப்பழங்காலத்திலேயே பருத்தி நூல் நெசவிலும் பட்டுநூல் நெசவிலும் தலைசிறந்து இருந்தனர். கண்ணால் காணமுடியாத அளவிற்கு மெல்லிய நூலால் துணிகள் நெய்யப்பட்டன. அழகான பூவேலைகள் செய்யப்பட்டன. அத்துணிகள் பாம்பின் தோலைப்போல மென்மையும் வழவழப்பும் பளபளப்பும் அமைந்தது.

நோக்கு நுழைகல்லா
நுண்ணிய பூக்கனிந்து
அரவுரி அன்ன அறுவை"
"பனிச்சென்று தெரியும்
கரையோட்டபட்டாடை"

"கொட்டைக் கரையபட்டுடை" என்ற அடிகளினாலே நெசவுத்தொழிலின் சிறப்பு அறியக்கிடக்கிறது.

செல்வம் கொழித்த செந்தமிழ் நாட்டிலே இல்லையென்று இருப்போரும் இருக்கத்தான் செய்தனர். அவ் ஏழைகளின் கிழிந்த உடையைப் பற்றி ஆசிரியர் ஒரு சித்திரமே தீட்டிக்காட்டுகின்றார்.

"ஈரும் பேனும் இருந்து
இறைகூடி
வேரோடு நனைந்து
வேறு இழை நுழைந்த
துன்னற் சிதாஅர்
துவர நீக்கி"

ஈரும் பேனும் கூடிக்குடியிருப்பது. வேர்வையால் நனைந்து நாற்றமடிப்பது. வேறு நூல்கள் நுழைந்து தைக்கப்பட்டது. கிழிந்த கந்தை, கந்தை உடையின் படத்தை இவ்வரிகள் சித்தரிக்கின்றன. மதுவிலக்கும் புலால் மறுத்தலும் பண்டைத்தமிழகத்து இருக்கவில்லை. தம்மிடம் வந்த விருந்தினர்க்குத் தமிழ் மகன் முதலில் மதுபானம் கொடுத்து மகிழச் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மாமிசத்தை வேகவைத்தும் சுட்டும் தின்றனர். நல்ல காய்கறிகளைச் சமைக்கவும் அறிந்திருந்தனர். விரல்போல் நிமிர்ந்து தனித்தனியாகச் சேர்ந்திருக்கின்ற சோற்றைப் பால்விடுச் சமைத்த நிகளோடு மிகுதியாக உண்போம் என்கிறார் புலவர். உணவை உண்பதற்குமுன் காக்கைக்குச் சோறு இடுவது பண்டைவழக்கம். ஒரு பண்டத்தைக் கொடுத்து மற்றொரு பண்டத்தை வாங்கிக் கொள்வது தான் பண்டைக்கால வாணிப முறை.

செல்வர்கள் வீட்டிலேபொன்னாலான பாத்திரங்களை வைத்திருந்தனர். அக்கால மக்கள் மறுபிறப்பிலே நம்பிக்கை கொண்டிருந்தனர். செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கும் தமிழ்மக்கள் விருந்தினர் விடைபெற்றுச் சென்றபோது ஏழடி பின்சென்று அன்புரை புகன்று அனுப்பி வைத்தனர். உழவுமுறை

(6ம் பக்கம் பார்க்க)

தேவை

ரேஸ் பிராண்ட் இனிப்புத் தொழிற்சாலைக்கு பயிற்சித் தொழிலாளர்கள் (Apprentices) தேவை. வயது 20 க்குள், இரசாயன அறிவுள்ள விண்ணப்பங்களுக்கு விசேஷ கவனம் செலுத்தப்படும். மாற்று நேர (Shift) வேலை செய்யவேண்டும். சகல விபரங்களுடனும் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்:—

ரேஸ் பிராண்ட் இனிப்பு தொழிற்சாலை
மானிப்பாய்

# தனி வழி

— இ. நாகராஜன் —

நீண்ட பெரும்வீதி நிலைகுலைந்த குச்சொழுங்கை
கூண்டை நிகர் குடிசை கோபுரங்கள் விண்ணெட்டும்
மாடி மனைகள்பல வகையாம் பெருங்கடைகள்
கூடிக் குவிந்தியற்கைக் கோல உருச்சிதைய
விஞ்ஞானம் வெற்றியுடன் வீறுற் றுயர்வடைந்தே
அஞ்ஞான மக்களையே அடக்கும் சிறுநகரம்.

சந்தைப் பெருமிரைச்சல், சாலைவண்டி ஒன்றையொன்று
முந்தி விரைந்தோடி முசும் முனகலொலி
வந்தென் செவிகளையே வருத்தும், மழைபெய்ய
அந்த அணிநகரின் அழகார்ந்த வீதியிலே
குண்டில் மழைநீரும் கூடிக் குவியுமதைக்
கண்டே சிலகாக்கை களித்துக் குளிக்கவரும்.

வீதிச் சொறிநாய்கள் விரைந்து குலைத்தோடிப்
பாதிக் குடலுடனே பாதையுள்ள மாட்டெலும்பை
சண்டை பிடித்திழுத்துச் சாப்பிடுமாம், அச்சப்தம்
மண்டை இடியினையே வருவிக்கும். வேற்றாலை
கொண்ட பொருட்களினைக் கொட்டிக் குவித்துவைத்துப்
பெண்டிர் சிலர் விற்கப் பேசும் ஒலியினிலே
எங்கள் தமிழ்த்தாயின் இனிமை குலையுமந்தப்
பங்கம் .தனைக்கூறின் பற்றி எரியுமுளம்.

அண்டை வருவோரை 'ஐயா' எனஅழைத்து
பண்டம் இதைப்பாரும் பவுனுக்கு ஒப்பென்றே
சொல்லும் அவர்கதையில் சுவையுண்டாம் ஆனாலும்
வல்லார் சிலசமயம் வருவாராம் சண்டைக்கே
எடுக்கின்ற இலாபமன்றி எதையும் அவரெண்ணார்
கொடுக்கும் பொருள்களிலே குறையேது மில்லையென்பர்.

சண்டை அவர்க்குள்வரும் சந்தையென்று பார்த்திடுவர்?
சொண்டை குலைந்திடவே குடிகாரர் தோற்றிடவே
பெண்டிர்க் குரியபெரும் பண்பை இழந்துவைக்கும்
தொண்டை ஒலிகேட்கின் துயரம் பெருகிவரும்!
ஓடி வரும்பஸ்கள் ஒதுங்குமுன்னே தேடியதைக்
கூடியிருந்தவர்கள் கூச்சலிட்டு ஏறுவதால்
தங்கள் உடலந்தைச் சங்கடத்து ளாக்கியவர்
அங்கு படுமவஸ்தை அந்தோ அளப்பரிதே!

ஓடும் மனிதர்களோ ஓய்வு ஒளிச்சலின்றித்
தேடும் உழைப்பையெலாம், தேநீர் சினிமாக்கள்
'கூல் சர்' குடிப்பாரில் கொடுப்பார்பின் ஆதாடி
தோல்வி யடைவதுடன் சுகமும் இழந்திடுவார்.
தமிழைத் 'தமில'ாக்கி தாயவளைக் கேலிசெய்து
நமது இனத்துக்கே நாளும் பழிசேர்ப்பர்.
சினிமா ஒலிபரப்பி செருவினிலே வந்துநின்றே
இனிக்கும் தமிழிசையை ஒழித்து ஒலிபரப்பும்.
காதோ இதைக்கேட்டுக் கதறுமிந்த ஊரினிலே
யாது வழியுளது யாமும் அமைதிபெற?
நரகம் எனும்ஒன்று நமனுலகில் உண்டென்றே
புராணம் புகலுமதைப் புதுமைப் பிரியர்களோ
கேலிக் கதையென்று கிண்டலினைச் செய்திடுவர்
ஞாலத் திருக்கின்ற நான்வாழ மனையமைந்த
நகரம் நரகமதாய் நாறும் இதையங்கு
சிகரம் இடுவதற்கே தேடிடுவார் உண்மையிதாம்!

∴ ∴ ∴

இந்த உபத்திரவம் இல்லா இடத்தேக
உந்தும் உளத்துக்கே ஒப்ப நடக்கின்றேன்
ஊரின் சிறுதொலைவில் உச்சி மயிரதனை
நேராய் வகிடெடுத்த நிலைக்கோ ருவமையென
ஒத்தைத் தனி பாதை ஒதுங்கிப் பனங்கூடல்
பற்றை புதர்களெலாம் பம்மும் இடத்தூடே
தனித்தே நகரத்தில் தருகின்ற துன்பமெனும்
அரியாய ஓலத்துக் கஞ்சியதோ நிம்மதியாய்
செல்லும் அதனூடே செல்லுகிறேன் சிந்தையிலே
அல்லல் மருவாத ஆன அமைதிபெற.

∴ ∴ ∴

சாலை இருபுறமும் தாளம் புதர்மல்கும்
கோலக் குரல்காட்டி குருவி இணையழைக்கும்
தும்பி இசைபாடிச் சுகந்த மலர்தேடும்
கொம்பின் சிறுகுயில்கள் குளிர்ந்த தமிழிசையால்
"கூக்கூ!" எனவிசைக்கும் குதிக்கும் அணில்களெலாம்
காகை பறந்தோடிக் கரையும் ஒலிகேட்கும்.

∴ ∴ ∴

ஒற்றைத் தனிப்பாதை ஒதுங்கும் தனிஇடத்தே
பற்றை யறுத்தெறிந்த பாவம் அறியாத
முற்றிக் கனிவுற்று முழுமை பெறுஞானம்
பற்றும் உளத்தையுள்ள, பாங்கார் புனைடைக்கும்
துறவி யெனநீண்டு தொங்கும் விழுதூன்றி
பிறப்பின் பயன்தெளிந்த, பெருமைக் குரியபெரும்
ஆல மரமொன்று அங்கே இருக்கதான்
சீல நிழல்தேடிச் சென்றேன் அமைதிபெற.

முன்னைப் பெருமையையோ பின்னைப் புதுமையையோ
தன்னைப் புகழ்வதையோ சகபாடி சேர்ப்பதையோ
வாய்ப்புந்தர் போடுமோ பேய்ப்புத்தி யோவின்றி
தாயின் கருணைமனம் தங்கச் சலனமற்று
தூய ஒழுக்கமுடன் தொண்டே கடமையென
நேயம் உளத்திருத்தி நிற்குதங்கே வெற்றியுடன்.
நூறாண்டு ஆவதற்குள் நோயால் மடிந்தழியும்
பேறு கிடைத்துள்ள பிள்ளை மனிதரொப்ப
நூறாண்டு ஆவதற்குள் நோயால் அழியாது
வீறு குலையாது விசனக் குணமின்றி
எத்தனையோ ஆண்டுகளாய் இங்கே—உளதின்னும்
எத்தனையாண்டுகளை எண்ணிக் கழிக்கிடுமோ?

சின்னஞ் சிறுவிதையில் சிறிய செடியாகித்
தன்னை வளர்க்கவொரு தாயின் துணையின்றிப்
பன்னாளாய் அவ்விடத்தே பாங்காய் வளர்ந்துயர்ந்து
தன்னில் தழைத்ததும் தக்க கிளைகளுடன்
யென்னம் பெரிதாகி பீடோ டிருப்பதுவேன்?
முன்னேன் அறிவனைத்தி மூடர் அறியாமே
நச்சுப்பாம் பாய்ப்பரிதி ஞாலத்தே சூடேற்றும்
உச்சிப் பொழுதினிலே உலகந் துடிக்கையிலே
தூர இடத்திருந்து சுமையோடு வந்துடலம்
சோர அமர்வோர்க்குச் சுகமான காற்றளித்து
நீக்கும் உடலயர்வை, நிழலை அளித்து வந்து
தாக்கும் பரிதிக்குத் தடையாக நின்றிடுமே.

ஆல மரத்தின்கீழ் அமர்வோர் சுமைவைத்துக்
காலாறச் செய்திடுதல் கருணை யெனக்கண்டார்
ஒருவர் அவர்பெருமை ஓதற் கெளிதாமோ?
பெருமை பலபெற்றுப் பீடுற்ற முன்னவருள்—
முல்லை மரம்வளர முன்வந்து பொற்றேரை
நல்ல உளத்தோடு நயந்தீந்தான் பாரியென்பான்
ஆடும் மயில்குளிர அகற்றத்தன் போர்வையினை
நாடிக் கொடுத்தவனும் நம்மினத்துப் பேகனன்றே
'தலையை அரிந்தெடுத்துத் தம்பியிடம் ஈந்தளித்து
விலையாகப் பொன்னேற்று விளங்குதமிழ் செய்க'' வெனச்
சொன்னேன் குமணனவன் தூய அருளி ரத்தம்
தன்னுட் கலந்திருந்த நக்கோர் அவராமே!
தூர இடத்திருந்து சோர வருவோரின்
பாரம் தனையேற்கப் பண்போடு நல்லவொரு
சுமைதாங்கி ஒன்றினையே கட்டியுளார் அதுஇன்னும்
அமைவாக அவ்விடத்தே அமைத்தோர் உளம்போல
வருவோர் சுமைதாங்கி வருத்தந் தனையேற்று
அருளை அளிப்பதற்கு அவ்விடத்தே உள்ளதுவாம்.

கடந்த களைப்போட்டி நாடும் அமைதிக்கவ்
இடந்தான் உகந்ததென இருந்தேன் இனிமையுறத்
தென்றல் வளிவந்தே தீண்டும் எனதுடலை
ஒன்றே பலகுருவி ஒயிலாய்ப் பறந்துவரும்
காக்கை பறந்தடித்துக் கருமை எழில்கூட்டும்
கூக்கூ எனக்குயில்கள் குளிரார் தமிழ்பாடும்
வண்டின் இசைநாதம் மனத்தில் மகிழ்வூட்டும்
சொண்டு பெருத்த'மரம் கொத்தி'த் துளைசெய்யும்
கிளிகள் பலகூடிக் கீக்கீ எனக்கத்தும்
குழகார் முயலினங்கள் குதித்துக் களித்தோடும்
பற்றைச் செடிகளிடை பலவர்ணப் பூக்களெலாம்
பொற்கு வடத்தில் புனைமுத்துப் போலொளிரும்
அருகே அமைவெளியில் அண்மையிலே பெய்மழையால்
பெருகி வளர்புல்லைப் பிரியம் மிகவுந்த
மந்தை மனமாக வாயாலே உண்டதையும்
எந்தன் விழிகண்டு இன்பக் களிகொள்ளும்
கோல எழிலோடு குங்குமாய்ச் சூரியனும்
ஞாலம் துலங்கஒளி நல்கிவரும் காலையிலே

தொல்லை மறவாத சுகந்தம் பரந்துவரும்
எல்லை தனிலிதிலே ஈட்டுகிற இன்பத்திற்
கீடோ எடுப் துவோ இல்லை எமக்குள்ள
பீடை அழித்தெடுத்து பெருகி வருகின்ற
துன்பம் தொடர்ந்தாலும் 'தூ'வென்றே எள்ளிடுவேன்
இன்பம் இதைப்பிரியேன் என்றே இருக்கின்றேன்.

∴ ∴ ∴

விளடி பலகழிந்து வேருய் நிமிடமென
தாளுய் அழிவுற்று தள்ளுண்டே அப்பால
மணியாய் அவைமாறும் மடியும் அதற்குப்பின்
அணியாய் வெளிநின்ற ஆவினமும் மற்றுயிரும்
சென்றே அகன்றிடவே செகத்திற் கொளிதந்து
நின்ற பரிதியவன் நெடுவானல் சென்றொழிந்தான்
காலக் கைகளூடே கடுகி விரைந்தோடி
சாலப் பெருக்கெடுத்து தள்ளுண்டு போனவுடன்
இருளின் புதைகுழியாய் இந்த இடம்மாற
அருகிற் துணையின்றி யார்தான் தனித்திருப்பர்
காலைப் பொழுதினிலே களிஊட்டும் எல்லாமே
ஞாலத் திருளுக்குள் நாசமதைப் பெற்றனவா?
மெய்யில் நடுக்கமது விரவப் பயத்காலே
பொய்யா கியவுடலே போக்கடித்து நாளைக்கே
நானென் னொருவனில்லை ஞாலத்தே என்றோதும்
ஏனோ தனித்திருந்து இறப்பை எடுப்பதுயான்?

நரகந்தான் ஆனாலும் நான்பிறந்த கொட்டிலிலே
வரவை எதிர்நோக்கி வாசற் புறந்தினிலே
பாசம் மிகவூட்டிப் பண்பாய் வளர்த்தஅன்னை
நேசக் கரம்நீட்டி நெருங்கும் மனையாட்டி
அன்பாய் மதலைமொழி அளிக்கும் குழந்தைகளே
இன்ப முகமீயும் இன்ப இடம்தேட
எந்த இடத்திருந்து இங்கோடி வந்தேனோ
அந்த இடத்துக்கே அடியேன் நடக்கின்றேன்
நகரத்து மின்சாரம் நாலு திசைகளிலும்
பகட்டி ஒளிகாட்டும் படமாளிகை பாடல்
ஓடிச் செவிவந்து "உலகத்தில் உன்னையன்பாய்க்
கூடி யணைக்கின்ற குடிசைச் சுவர்க்கத்தை
விட்டே ஒதுங்கியெங்கு வேதாந்தம் தேடினையோ
நட்ட நடுநிசியில் நம்மினத்தின் மத்தியிலே
ஒட்டிக் கிடக்கின்ற உறவிற் குவமையுண்டோ
தட்டிக் கழித்தவனே தடுமாற்றம் விடு"என்றே
கருத்துத எனக்கூட்டி சதறும் அதைக்கேட்டு
பெருத்த பசியோடே பிரிந்து குடிசைக்குச்
சென்றேன் குடிசையிலே சேர்ந்த உறவெல்லாம்
அன்றே அலர்மலராய் அகத்தே மகிழ்கூட்டக்
கட்டி யணைத்தனரே! காடகத்தே பாசத்தை
விட்டே அகன்றவனும் விடிவதனைக் கண்டேனே!

ஈழநாடு
EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389
யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு கார்த்திகை மீ 28உ (13-12-64)

## மீண்டும் மதவெறி?

இலங்கை அரசியலில் மீண்டும் மதவெறி கிளம்பக் கூடுமோ என்று சென்னை 'ஹிந்து' பத்திரிகை கவலை தெரிவித்திருக்கிறது. காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் கொலைக்குப்பின் இங்கு அரசியலில் பிக்குகள் அதிகம் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்தனர். ஆனால் சமீபத்தில் அவர்கள் ஊர்வலம், கூட்டம் முதலியவற்றில் அதிகம் கலந்துகொள்ள முன்வந்துள்ளது கவலைக்கு இடமளிப்பதாகத் தெரிவித்துள்ளது பொறுப்பு வாய்ந்த அப்பத்திரிகை.

மூன்றே நிமிடங்கள் நடந்த இரண்டாவது சிம்மாசனப் பிரசங்கத்திலே கூறப்பட்ட ஒரே ஒரு யோசனை, பௌத்த மதத்துக்கு இங்கு சட்ட மூலம் விசேஷ அந்தஸ்து அளிக்கவேண்டுமென்பது தான். நல்லவேளையாகப் பார்லிமெண்ட் சபை (வேறு காரணங்களால்) அதை நிராகரித்து விட்டது.

இடதுசாரிகளுடன் கூட்டுச்சேர்ந்த பிரதமர் ஸ்ரீமா இந்தப் புதிய யோசனையைக் கொண்டு வரக் காரணம் என்ன? இடதுசாரிகள் மதவிரோதிகளென்றும், ஆகவே அவர்கள் அடங்கிய அரசாங்கம் மதத்தையே அழித்துவிடுமென்றும் பிரசாரம் கிளம்பியது. இதற்குப் பதிலளிக்கும் முகமாகத்தான், பௌத்தத்துக்கு விசேஷ அந்தஸ்தை சட்ட மூலம் அளிப்பதாக அவர் கூற முன்வந்தார் போலும். அப்படிக் கூறியும் கூடப் பயனில்லை. அரசாங்கம் தோற்றது. புதுத் தேர்தல் நடைபெறுகிறது.

செத்துப்போன அந்த யோசனை மீண்டும் தலைதூக்குமா? பௌத்தத்தை அரசாங்க மதமாக்குவதாக அடுத்த தேர்தலில் புதிய கோஷங்கள் கிளம்புமா? பௌத்த மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக அரசாங்கக் கட்சியோ அல்லது வேறு கட்சிகளோ மதகோஷங்களைக் கிளப்புமா? அப்படியாயின் அதனால் நாட்டுக்கு மேலும் பல பாதகங்கள் ஏற்படுமென்பதை விளக்கத் தேவையில்லை.

மொழிவெறியைக் கிளப்பினால் தேர்தலில் வெற்றி பெறலாமென்று நினைத்து தனிச்சிங்கள கோஷங்களைக் கிளப்பினார் சேர் ஜான் கொத்தலாவலை. பாவம்! கொக்குவிலில் அவர் தவறிக் கூறிவிட்டதற்கு மாற்றாகத்தான் இப்படிச் செய்ய நேரிட்டது. என்றாலும் கண்ட பலன் என்ன? அவரது கட்சி தோற்றதுடன், நாட்டில் ஒற்றுமையும் அமைதியும் குலைந்தன. இது பிரதமர் ஸ்ரீமாவுக்கும் மற்ற அரசியல் கூட்டுத் தலைவர்களுக்கும் நல்ல எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அரசியல் முதலிய சுயநல நோக்கங்களுக்காக மதவெறியைக் கிளப்பிவிடுவது புதிதில்லை. சரித்திரம் இதற்குப் பல சான்றுகள் கூறும். வெறிகளைக் கிளப்பிவிட்டவர்கள், பலாத்காரம் அல்லது அரசியல் ஆதிக்கத்தின் மூலம் மற்ற மதங்களை அழித்துவிடலாமென்று, பல பல அக்கிரமங்கள் செய்தவர்கள் இவர்கள் நிலை உலகில் இன்று எப்படியாகியுள்ளதென்பதைச் சற்றே நிதானமாகப் பார்த்தால், அறிவுள்ளவர்கள் இவ்வித முயற்சிகளில் ஈடுபடமாட்டார்கள்.

இது எப்படியாயினும், அமைதியையும், சமரச வாழ்வையும் ஒற்றுமையையும் விரும்பும் பொதுமக்கள் என்ன செய்ய வேண்டுமென்பதே கேள்வி. ஸ்ரீமாணிக்கவாசகர் முதலிய சமயகுரவர்கள் இதற்கு நல்ல வழிகாட்டியுள்ளனர். சைவ சமயத்தை ஒழித்து பௌத்தத்தை நிலைநாட்டுவதற்காக இலங்கையிலிருந்து சிலர் சிதம்பரம் சென்று வாதுக்கு அழைத்தார்களாம். ஸ்ரீமாணிக்கவாசகப் பெருந்தகை, ஸ்ரீசிதம்பரேசனின் அருளையே நம்பி, சைவத்துக்கு வந்த ஆபத்தைத் தீர்த்தார். மக்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை உலகமே போற்றும்படியான திருவாசகமூலம் இடித்து இடித்துச் சொல்லி இருக்கின்றார்.

தெய்வத்தை மறந்து நம்மில் பலரும் சுயநல வாழ்வு வாழ்வதால்தான் சமயத்துக்கு மட்டுமின்றி நமக்கே பல பல இன்னல்கள் தோன்றுகின்றன. மணிவாசகப்பெருந்தகை காட்டியுள்ள வழியிலே, தெய்வபக்தியை வளர்த்து அன்பான அறவாழ்க்கை வாழ வழிகோலவேண்டுமென்பதே இப்போது மணிவாசகர், திருவாசக விழாக்களை உற்சாகத்துடன் கொண்டாடுவதின் முக்கிய நோக்கம். அப்படி நாம் வாழவேண்டுமாயின், எவ்வித சமய வெறியாளர்களுக்கும் நாம் அஞ்சத் தேவையில்லை. எந்தச் சமயத்திற்கும் எவ்வித ஆபத்தும் வந்துவிடாது. உண்மைத் தெய்வபக்தியுள்ளவர்களுக்கு அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்சவருவதுமில்லை.

# மணிவாசகர் கண்ட தில்லை

— தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் —

உருத்தெரியாக் காலத்தே
உள் புகுந்து என் உளம் மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன்
அணிகொள் தில்லை கண்டேனே

என்பது மணிவாசகர் பாடிய பாடல், திருப்பெருந்துறையிலே குருந்த மரத்தடியிலே தன்னை வலிந்து ஆட்கொண்ட பெருமான், அப்பெருமானோடு இணைந்து அவர் அருளிய சிவபதத்தின் அருமையையெல்லாம் தான் தில்லையிலே கண்டுகொண்டதாக மணிவாசகர் பாடுகிறார். மணிவாசகருக்குத் திருப்பெருந்துறைக்கு அடுத்தபடியாகத் தில்லையில் ஈடுபாடு அதிகம் இருந்திருக்கிறது. ஆதலினாற்றான் தில்லைபாதி திருவாசகத்தில் என்ற பழமொழியே எழுந்திருக்கிறது.

தில்லைமூதூர் ஆடிய திருவடியிலே அளவிலா ஈடுபாடு உடையவராய் இருந்திருக்கிறார். திருப்பெருந்துறையை விட்டுப் புறப்பட்ட மணிவாசகர் உத்தரகோசமங்கை, திருவிடைமருதூர், திருவாரூர், திருமுதுகுன்றம், திருஅண்ணாமலை எல்லாம் சென்றபின்தான் திருத்தில்லை வந்தடைந்திருக்கின்றார். அங்குதான் திருவாசகத்தை மணிவாசகர் சொல்லச் சொல்ல சிற்றம்பலவன் ஏட்டில் எழுதினான் என்பது வரலாறு. மேலும் திருவாசகத்திற்கு உரைசொல்லும்படி மணிவாசகரைக் கேட்டபோது, அதன் பொருளாக விளங்குபவன் தில்லையில் நடம்புரியும் திருச்சிற்றம்பலவனே என்று அவனையே சுட்டிக் காட்டினார் என்பதும் கர்ணபரம்பரை வழக்காக நாம் தெரிந்திருக்கிறோம். தில்லையில் வித்தகர் தில்லையாடலைக் கண்டு பரவசம் அடைந்த மணிவாசகர் பின்னர் அங்கு பல நாட்கள் இருக்கும் நாளில் [illegible] திருப்பதிகம், கோயிற்பதிகம், கீர்த்தித் திருஅகவல், திருஅண்டப்பகுதி, போற்றித்திருஅகவல், திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருஉந்தியார், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் முதலியவற்றைப் பாடினார். அன்னைப்பத்து, கோத்தும்பி, குயிற்பத்து, தசாங்கம் அச்சப்பத்து இவைகளும் இங்கெழுந்தவையே. இவைகளைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேச காலமோ நேரமோ இடந்தராது.

தில்லையிலே ஆனந்தக்கூத்தருடைய தாண்டவத்திலே ஈடுபட்டு அனுபூதி பெற்று அசைவற்று நின்றிருக்கிறார். உதையறியாத மெய்க்காவலர் இவரைக் கனகசபையை விட்டு கீழே இறங்கச் சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் சொற்களை இவர் செவி ஏற்கவில்லை. சிவானந்தப்பிரகாசத்தில் திளைத்து நின்று சிவ, சிவ என்றே குரல்கொடுத்திருக்கின்றார். அதன்பின் மோனநிலை கலைந்து கோயிலை வலம் வரும்போது கீர்த்தித்திரு அகவல், திருஅண்டப்பகுதி போற்றித்திரு அகவல் ஆகிய மூன்று அகவல்களையும் சொல்லிக்கொண்டே வந்திருக்கின்றார். அதனால்தான் திருக்கோயில் வலம் வரும்போது வீண்பேச்சும் வழக்குரையும் பேசாது இவ்வகவல்களையே பாராயணம் செய்துகொண்டே வரவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது. ஆனால் இந்த மரபை நாமெல்லாம் அனுஷ்டிக்கிறோமா என்பது கேள்வி.

கீர்த்தித்திரு அகவலில், அரியொடு பிரமற்கு அளவறியொண்ணாதவனாய் நீண்டு சோதி தோற்றிய தன்மையை நினைக்கின்றார். உத்தரகோசமங்கையுள் இருந்து வித்தக வேடம் காட்டிய இயல்பைப் பாராட்டுகின்றார். திருஅண்டப் பகுதியிலே, இவ்விசை வீணையில் இசைந்தோனை பிரம்மன் மால் காணாப் பெரியோனை, அதேசமயத்தில் பக்தி வலையில் படுவோனை எல்லாம் இறைவனைக் காண்கின்றார். அவன் பஞ்சபூதங்களிலும் நிறைந்திருக்கிற தன்மையே,

பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

என்றெல்லாம் விளக்கம் தருகின்றார்

கீர்த்தித் திருஅகவல் முதலிய மூன்று அகவல்களையும் பாடிய பின்னர் மணிவாசகர் தில்லையில் தங்கியிருந்த காலத்து அங்குள்ள பெண்கள் வளைக்கரம் ஒலிக்க, கிண்கிணி மாலைகள் ஒலிக்க, முகத்தில் குறுவியர்வை பொடிப்ப, விழிபுரள சுண்ணம் இடிப்பதைக் கண்டார். அதையே பொற்சுண்ணம் இடிக்கும் பாடல்களாகப் பாடினார்.

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய் குழல் வண்டினம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆட
செங்கயற்கண் பனி ஆட ஆட
பிறவி பிறரோடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

என்னும் பாடல்களைப் படிக்கும்போது சுண்ணம் இடிப்பதாகிய சுவைமிகுந்த பண்ணோசையும் ஆடிப்பாடும் துள்ளலோசையும் கலந்து நமக்குப் பேரானந்தம் தருகிறது என்று வியப்பில்லையே!

வட்டமிட்டுப்பெண்கள் வளைகரங்கள் தாம் ஒலிக்கக்கொட்டி இசைத்திடும் கூட்டமுதப் பாடலே தெள்ளேணம் கொட்டுதலாகும். நம் நாட்டில் இதனைக் கும்மி என்னும் மலையாள மக்கள் கைகொட்டிக்களி என்றே இதனை அழைக்கின்றனர்.

வான்கெட்டு மாருதம் மாய்ந்து
அழல் நீர் மண் கெடினும்
தான் கெட்டலின்றி
சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன் கெட்டு உணர்வுகெட்டு
நான் கெட்டவா பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ

என்று கேட்கும்போது நான் என்னும் அகந்தை நம்மைவிட்டு ஓடியதில் ஏற்பட்ட மகிழ்ச்சி தோன்றுகிறதல்லவா?

தில்லையில் அடிகளார்பாடிய பாடல்களில் எல்லாம் சிறப்பாக நான் கருதுவது திருச்சாழல் பதிகத்தையே. இன்றைய உலகம் கேள்வி பதில் உலகமாக இருக்கிறது. பத்திரிகைகளிலே சினிமா, சினிமா நடிகர்களைப் பற்றிய கேள்வியும் பதிலும் நிறைந்திருக்கிறது. சில கேள்விகளுக்குப் பேனா மன்னனும், சில கேள்விகளுக்குப் பைங்கிளியும், இன்னும் சில கேள்விகளுக்குச் சடாம் பிள்ளையும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் தெரிந்துதானோ மணிவாசகரும் கேள்வி பதில் முறையிலேயே திருச்சாழல் பதிகம் பாடியிருக்கிறார். சாழல் என்ன விளையாட்டு என்று தெரியவில்லை அம்மானையைப் போல் இருந்திருக்க வேண்டும். இச்சாழல் பாடல்களுக்குப் பக்கபலமாக ஒரு வரலாறும் கூறப்படுகிறது. ஈழநாட்டிலிருந்து வந்த புத்தர்கள் சிலர் தில்லை வந்து தில்லைவாழ் அந்தணரை வாதுக்கு அழைத்திருக்கின்றனர் இறைவன் ஆணைப்படி மணிவாசகர் இறைவனை நினைந்திருக்கிறார். பௌத்தர்கள் எல்லாம் வாய் மூடி ஊமைகளாக நின்றிருக்கின்றனர். தில்லையை ஆண்ட மன்னன் மகள் ஒருத்தி ஊமையாக இருந்திருக்கிறாள். கடைசியில் இறை அருளால் அவளே வாய் திறந்து பேசி பௌத்தர்களையெல்லாம் மடக்கியிருக்கிறாள். இந்த அற்புத நிகழ்ச்சிக்கு ஒரு உருவம் கொடுத்தே மணிவாசகர் திருச்சாழலில் கேள்வி பதிலாகவே பாடியிருக்கிறார் என்பர்.

தென் பாலு கந்தாடும்
தில்லைச் சிற்றம்பலவன்
பெண் பாலுகந்தான்
பெரும் பித்தன் காணேடீ

என்று சாழல் விளையாட்டில் ஈடுபட்ட பெண்ணொருத்தி கேள்வி போடுகிறாள்.

இதனைக் கேட்ட மற்றொரு பெண் —

பெண்பால் உகந்திலனேற்
பேதாய்! இருநிலத்தோர்
விண்பாலியோகெய்தி
விடுவர் காண் சாழலோ

என்று பதில் கூறியிருக்கிறாள்,

அம்பலத்தே கூத்தாடி
அமுது செயப் பலி திரியும்
நம்பனையும் தேவனென்று
நண்ணுவதும் என்னேடீ

என்பது ஒரு பெண்ணின் கேள்வி.

நம்பனையும் மாமாகேள்
நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசா என்று
ஏத்தின காண் சாழலோ

என்பது இக்கேள்விக்குப்பதிலாக அமைகிறது. இக்கேள்விக்குப் பதில்தான் எவ்வளவு சுவையாக அமைந்திருக்கின்றது.

தில்லையில்-பூவல்லி கொய்து கோத்தும்பி விரட்டி, பொன்னூஞ்சல் ஆட்டி பலபல பாடல்களைப் பாடியபின், தன் இதயக்குயிலையும் கூவவிட்டிருக்கிறார்.

கீதம் இனிய குயிலே!
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதமிரண்டும் வினவிற்
பாதாளம் ஏழினுக்கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற்
சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதிகுணம் ஒன்றும் இல்லான்
அந்தமிலான் வரக்கூவாய்

என்று குயிலுக்கு வேண்டுகோள் விடுகிறபோது இறை உணர்ச்சி மணிவாசகரது உள்ளத்தில் நிறைந்திருக்கும் பான்மையை உணர்கிறோம். தில்லையில் மணிவாசகர் பெற்ற அனுபவம் எல்லாம் இப்பாடல்களில் விளங்கக் காண்கிறோம். மணிவாசகர் கண்ட தில்லை அவருக்கு மாத்திரமல்ல, திருவாசகம் படிக்கும் நமக்கெல்லாமே ஒரு அற்புத அனுபவமாகவே அமைகிறது.

தாய்நாடான தமிழ்மக்கள், இத்தில்லையம் சிதம்பரத்தை நினைந்து நினைந்து மகிழ்ந்தால் சேய் நாடான ஈழத்துமக்களும் காரைநகர் என்னும் ஈழத்துச் சிதம்பரத்தை நினைந்து நினைந்து மகிழலாம் தானே! அங்கு நடக்கும் திருவெம்பாவைவிழா, மணிவாசகர் விழா எல்லாம் ஈழத்தில் நிலைத்திருக்கும் சைவ உணர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்று நான் சொன்னால் அது மிகையாகாதல்லவா!

(ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தான வெளியீடாகிய திருவாதிரை மலரிலிருந்து எடுக்கப்பெற்றது)

---

யாழ்ப்பாணம், ஞாயிறு

உருத்திரபுரம் சிவாலயத்தின் புனருத்தாரண வேலை தொடங்கிய பத்தாவது ஆண்டு விழாவை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இன்று மாலை சிவாலய புனருத்தாரண சபை நடாத்தவிருக்கிறது.

இவ்விழாவில் காணி அபிவிருத்தி நீர்ப்பாசன மின்சாரப் பகுதி நிரந்தரக் காரியதரிசி திரு ம. ஸ்ரீகாந்தா, சிலநெறிப் பாதுகாவலர் திரு. த. முத்துசாமிப்பிள்ளை, திரு கே.பி. ஹரன் உட்பட பல பிரமுகர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். வி. க. ஆறுமுகம் ஜோஷியர் "உருத்திரபுரச்சிவன்" என்ற பொருள் பற்றி வில்லுப்பாட்டு நிகழ்த்துவர்.

# பொதுஜனம் விரக்தி

ரொம்ப நாளைக்குப்பின் ஸ்ரீமான் பொதுஜனத்தைக் கண்டேன். கொட்டும்மழையில் வேகமாக ஓடி ஓர் மாடிக்கட்டிடத்தில் ஒதுங்கினர். நானும் கூடவே ஓடிப்போய் முகத்தைக் காட்டினேன்.

அவிழ்ந்துகிடந்த குடுமியை தட்டிக்கொண்டே, "இங்கேயும் வந்துவிட்டீரா. முகத்தில்விளக்கெண்ணெய் வடிகிறதே" என்று மட்டம்தட்ட ஆரம்பித்தார்.

"உங்கள் முகத்தில் மழைத் தண்ணீர் அல்லவா வடிகிறது" என்றேன் சமாளித்துக் கொண்டு.

"இல்லை ஓய். உம்முடைய முகத்தையல்லவா சொன்னேன். விளக்கெண்ணெயும், வேப்பெண்ணெயும் சேர்ந்து வடிகிறது" என்று மீண்டும் மட்டம் தட்டினர்.

"இரும் ஐயா" என்று சட்டையைப் பிடித்து நிறுத்தினர். பழைய பாப்லின் துணியாக இருந்ததால், அவர் பிடித்த இடத்தில் சட்டை கிழிந்துவிட்டது.

"அடடா" என்ருர்.

"பரவாயில்லை. கையைவிடுங்கள். அரைநிர்வாணம் ஆவதற்குள்" என்றேன்.

அவர் கையைவிட்டதும் சட்டையில் இரு ஜன்னல்கள் தென்பட்டன. அதன்வழியாக உள்ளேபார்த்தார்.

"பாழாய்ப்போச்சு. உள்ளே உடம்பல்லவா இருக்கிறது? நாட்டிலும், சமூகத்திலும் நடப்பதைக்கண்டு கண்டு உங்களுக்கு எதை எடுத்தாலும் சந்தேகமாய்ப்போச்சு" என்றேன்.

"நாசமாய்ப்போச்சு. நாட்டை ஞாபகப்படுத்திவிட்டாய், சற்று நேரம் மறந்திருக்கலாறதா? எப்படி இருக்கிறது" என்ருர் எசத்தாளமாக.

அசடுவழிய முகத்தைத் நட்விக்கொண்டேன் அதைக் கவனிக்கிருரா என்று ஓரக்கண்ணுல் பார்த்தேன் என்ன குழுமடித்தனம். அர்த்தபுஷ்டியுடன் அதையும் கவனித்துக் கொண்டிருந்தார் அவர் பொதுஜனத்தின் பார்வையிலிருந்து எதுவும் தப்பமுடியாது போலும்.

"எந்த அரசாங்கம் வந்தாலும் தமிழரின் நிலை அப்படியேதான் இருக்கும்போல் தெரிகிறது. அப்படித்தானே" என்ருர்.

"இருக்கலாம். தமிழருக்கு மட்டும்தான பிரச்னை என்பதல்ல, சிங்களவருக்கும் மற்றவர்களுக்கும்கூடப் பிரச்னைகள் இருக்கின்றன. சிலருக்கு மொழிப்பிரச்னை முக்கியம். சிலருக்கு பொருளாதாரப் பிரச்னை முக்கியம். சிலருக்கு பௌத்தமதம், சிலருக்கு பிரஜா உரிமை. சிலருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இப்படி ஒவ்வொருசாராருக்கும் ஒவ்வொரு பிரச்னை. அவரவர்களுக்கு அவரவர் பிரச்னை தான் பெரிது. இதில் எந்தப் பிரச்னையை அரசாங்கம் தீர்த்திருக்கிறது? எந்த அரசாங்கம் திறமையான தேசிய ஜனநாயக அரசாங்கமாக இருந்திருக்கிறது?" என்றுபிரசங்கம் அடித்தேன்.

"என்னுடைய சிந்தனையை நீர் திசை திருப்பி விடுவீர். உம்மோடு பேசினலே குழப்பம் ஏற்பட்டுவிடுகிறது. சரி, நான் சென்று வரட்டுமா" என்ருர்.

"சென்று வாருங்கள்" என்றேன.

# உலகமேடை

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்கிறீர்களா? அப்படியும் இருக்கலாம்" என்றேன், சமாளிக்கமுடியாமல்.

"உமக்கென்ன வந்துவிட்டது. உயிரோடு தானே இருக்கிறீர். ஏன் அசடுவழிகிறது" எனச்சற்று பலமாகக் கேட்டார். கையையும் காலையும் அவர் ஆட்டி அபிநயித்தது, பிறர் கவனத்தைக்கவர்வதாய் இருந்தது.

"மெதுவாகச் சொல்லுங்கள் மற்றவர்கள் சிரிக்கப்போகிருர்கள்" என்றேன் அமைதியாக.

"சிரிக்கட்டுமே உம்முடைய மூஞ்சியும், லட்சணமும் இருக்கிற இருப்பில் யார்தான் சிரிக்க மாட்டார்கள். ஷேவ் எடுத்து பத்து நாள இருக்குமா" என்ருர் குத்தலாக.

எனக்குக் கோபம் வந்துவிட்டது. "அது என்னுடைய இஷ்டம் ஐயா. உமக்கென்ன" என்று பாய்ந்தேன்.

ஆனல் பொதுஜனம் சாமான்யப்பட்டவரல்ல லேசில்அசையாதவர். "உமக்கென்ன சொந்தக் கஷ்டமா, அல்லது நாட்டைப்பற்றிய கவலையா" என்று பரிவுடன் கேட்டார்.

அதற்கிடையில் அவரது குடுமி ஒழுங்காகக்கட்டப்பட்டிருந்தது முகத்தில் இருந்த தண்ணீர் வடிகாலைப் போல் உடம்பு வழியாக ஊடுருவிச் சென்றது.

"என்னுடைய கஷ்டத்தை ஏன் கேட்கிறீர்கள் சுவாமி எனக்கு உடல் கஷ்டம், உள்ளக் கஷ்டம் எல்லாம் இருக்கிறது ஆனல் சொந்தக்கஷ்டத்தை உங்களிடம் சொல்லித்தான் என்ன பயன்? நீங்கள் உலகநிலைமை பற்றியல்லவா கேட்பீர்கள்" என்றேன்.

"அப்படிச் சொல்லாதேயும். நான் காசுக்காரனல்ல. உமக்குப் பண உதவி எதுவும் செய்யமுடியாது. ஆனல் நாலு வார்த்தை ஆறுதல் சொல்லலாம். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப்பாவிப்பவன் எவனே அவனே ஞானி" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

"உங்கள் உபதேசத்துக்கு நன்றி. வரட்டுமா" என்றுநகர்ந்தேன்.

மென்று விழுங்கினேன். சரி, நாட்டில் என்ன நடக்கிறது? அதையும் தான் சொல்லேன்" என்று கேட்டார் பொதுஜனம்.

"நாட்டில் என்ன நடக்கவில்லை? எல்லாம் நடக்கிறது தேர்தல் நடக்கிறது. மந்திரிகள் வருகிருர்கள்-போகிருர்கள். பார்லிமெண்ட் நடக்கிறது" என்று விளக்கினேன்.

"அது சரி ஓய். பழைய அரசாங்கம் போகிறது. புதிய அரசாங்கம் வருகிறது. பழைய மந்திரிகள் போய் புதிய மந்திரிகள் வருகிருர்கள். நமக்கு அதனல் என்ன நன்மை" என வினவினர்.

"ஏன் இல்லை? நமக்கு சொத்துரிமை இருக்கிறது பொலிஸ்பாதுகாப்பு இருக்கிறது. இலவச ஆஸ்பத்திரி இருக்கிறது, தபால், தந்தி, போக்குவரத்து வசதிகள் எல்லாம் இருக்கின்றனவே."

"அதெல்லாம் சரி. சமூகத்தில் நல்ல மனிதரைக் காண்பதே அபூர்வமாய் இருக்கிறது. பொய்யும், புரட்டும், அயோக்கியத்தனமும், லஞ்ச ஊழலும், களவும், அகங்காரமும், தற்பெருமையும், வகுப்புத்துவேஷமும் புரையோடிக்கிடக்கின்றன இந்நாட்டுக்கு இப்போது அயூப்கான், ஒரு சுகர்ணோ, ஒரு ஒருநிக்ருமா, ஒரு நாஸர் தான் தேவை. சர்வாதிகாரத்தினல்தான் சமூக ஊழல் வேரறுக்கலாம்போல் தோன்றுகிறது" என்று ஆரம்பித்தார் பொதுஜனம்.

"நீங்களே அப்படிச் சொல்கிறீர்களே எங்கள் நாடுஜனநாயகநாடு. சுதந்திரமாய்வாழஎங்கள் மக்களுக்கு ஜனநாயகம் தானே தேவை" என்றேன் இடைமறித்து.

'ஆமாம் ஆமாம். இங்கு என்ன ஜனநாயகம் வாழுகிறது? உம் மூஞ்சியைப்போல்தான் இங்கு ஜனநாயகம் இருக்கிறது" என்ருர் எரிச்சலுடன்.

முன்னுல் இருந்த கண்ணாடியில் "மூஞ்சி"யைப் பார்த்தேன். தற்கொலை செய்து கொள்ளலாம்போல் இருந்தது.

"என்ன பார்க்கிறீர்? ஜனநாயகம் கண்ணாடியில் தெரிகி



# ரஸபாவத்தைக் கொடுக்கும் ராகங்கள்

— வி. என். பி. —

இந்திய சங்கீதத்துக்கு ஒரு தனி மதிப்பும் அழகும் கொடுப்பது ராகம் பாடுதல். மேனாட்டு சங்கீதத்திலோ அல்லது வேறெந்த நாட்டு சங்கீதத்திலோ இதைக்காண முடியாது. மக்களிடத்தில் முதலில் தோன்றியது பாட்டு. அதன் பின்னரே ராகம் தோன்றியது. பாட்டுகளுக்கு ஒரு வகையான ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக நடைபெற்ற முயற்சிகளின் விளைவே ராகம் என்று கூறலாம். பாட்டுகள் முதலில் 3, 4 சுரங்களுக்கு உட்பட்டவையாக அமைக்கப்பட்டன பின்னர் 5, 6, 7 சுரங்களிலும் அமைந்தன. பாட்டுகளின் வர்ணமெட்டை சுரங்கள் மூலம் வகுக்கும் முறை அக்காலத்தில் இருக்கவில்லை, இன்று எந்தப் பாட்டையோ அல்லது எந்த இசைக் கோர்வையையோ ஸ, ரி, க, ம, ப, த, நி என்ற சுரங்களில் எழுதிவிடலாம். இந்த முறை தோன்றுவதற்கு முன்பு ஒருவர் ஒரு கிராமியப் பாடலையோ, இசைக் கவிதையையோ அல்லது வேறுவிதமான பாட்டு வகையையோ அதன் வர்ண மெட்டுடன் சேர்த்து மனனம் செய்து கொண்டார். பாட்டின் சொற்கள் அல்லது சாகித்தியம் மறந்துவிட்டாலும் அதன் இசையமைப்பை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு சொற்களுக்குப் பதிலாக 'தரன' வழியைப் பின்பற்றியிருப்பார்.

பல மொழிகள் பேசப்படும் ஒரு நாட்டில் சாகித்தியங்களை மறந்துவிடுவது சகஜம் ஆகையால் இந்த 'தரன' வழி இசையமைப்பை மறந்துவிடாமலிருப்பதற்கு உதவியாயிருந்தது. இன்றும்கூட நாம் ஒரு மறந்துபோன பாட்டின் வர்ணமெட்டை, அதாவது அது பாடப்பட வேண்டிய இசையமைப்பை, 'தரன' மூலம் வெளியிடுகிறோம் இப்படியே ஒருபாட்டின் இசையமைப்பை மட்டும் மனதில் தியானித்து அதைத்திரும்பத்திரும்பப்பாடிக்கொண்டே போக, சாகித்தியம் மறந்துபோய், அதன் நாதச் சாயை மட்டும் நினைவில் இருந்தது. ஒவ்வொரு பாட்டுக்கும் ஒரு தனி நாதச் சாயை இருக்கவேண்டும் தானே? வேறுபட்ட நாதச் சாயைகள் உண்டாகின. சிலவற்றில் ஒருசுரம் முக்கியமாக விளங்கும். வேறுசிலவற்றில் வேறு சுரங்கள் மேலோங்கி நிற்கும். அதாவது அந்த முக்கியமான சுரங்களை அழுத்திப் பாடினுல்தான் குறிப்பிட்ட ஒரு நாதச் சாயை தெளிவாகப் புலனுகும். இந்த சுரங்களைத்தான் பிற்காலத்தில் ஜீவசுரங்கள் என்று அழைத்தார்கள்.

இப்படியே ஒரு பாட்டின் நாதச் சாயையை மனனம் செய்துகொண்டு வரும்போது, ஜீவசுரங்களை அழுத்தி இசைக்கும்போது, சொற்களில்லாத ஓர் இசைக்கோலம் ஏற்பட்டது. இதுவே ராகத்தின் அஸ்திவாரமாகும்.

ராகங்களுக்கு பெயர்வைக்க நேரிட்டபோது, ஆதியில் எந்த ஊரில் அல்லது எந்த சாதியினரிடமிருந்து அந்த ராகத்துக்குரிய மூலப் பாடல்களைக் கேட்டார்களோ அந்த ஊர் அல்லது சாதியினரின் பெயரையே ராகத்துக்கும் சூட்டினுர்கள்.

பிற்காலத்தில் 72 மேளகர்த்தா ராகங்களும் (தாய் ராகங்கள்) அவற்றிலிருந்து பிறந்த ஆயிரக்கணக்கான ஜன்ய ராகங்களும் ஏற்பட்டன. இசை வளர்ந்த வரலாற்றைப்பற்றி எழுதுவதே இக்கக் கட்டுரைகளின் நோக்கமாதலால் சுரங்கள், கமகங்கள், மூர்ச்சனைகள் முதலிய இசை நுணுக்கங்களைப்பற்றி இங்கு கூறப்படவில்லை.

ஒரு ராகத்தின் பிரதான அம்சம் அது எழுப்பக்கூடிய ரஸபாவமே. எத்தனையோ ராகங்கள் வெறும் சுரச் சேர்க்கையாய் இருக்கின்றனவே அன்றி குறிப்பிட்ட ஒரு ரஸத்தைக் கொடுக்கவல்லனவல்ல. ஆகையினுல்தான் கணக்குப் பிரகாரம் ஆயிரம் ராகங்கள் இருந்தாலும் இன்று இசைக்கப்படுவதுசுமார் 50 க்குட்பட்ட ராகங்களே ஒரு ராகத்தை இசைக்கும் போது அதில் ரஸபாவம் ஸ்பஷ்டமாகவும் இலகுவாகவும் தோன்ற வேண்டும். இதற்கு உதவியாயிருப்பவைதான் மேலே கூறிய ஜீவஸ்வரங்கள். ஜீவஸ்வரங்களைத் தவிர ஒவ்வொரு ராகத்துக்கும் சில விசேஷமான பிரயோகங்களும் பிடிகளும் உள்ளன. இவற்றை அறிந்து பாடினுல்தான் ரஸம் பிறக்கிறது. சங்கீதமென்பது வெறும் சணிதமன்று. அது உள்ளத்தைத் தொட்டு கேட்பவர் மனதிலும் இசைப்பவர் மனதிலும் ஒருவித உணர்ச்சியை உண்டு பண்ணவேண்டும். அல்லாவிட்டால் அது சங்கீதமாகாது. கர்நாடக சங்கீதத்தில் ஒன்பது விதமான ரஸங்களையும் உண்டு பண்ணக்கூடிய பல ராகங்கள் இருக்கின்றன. சங்கீதம் செய்பவர்கள் இவற்றை அறிந்து கொள்வது மிகவும் முக்கியம்.

(தொடரும்)

## பிரமுகர்களும் நிகழ்ச்சிகளும்

**ஜே. பி. எஸ். ஹால்டேன்:**

தலைசிறந்த அறிவியல்அறிஞரான இவரது மறைவு அறிவியல் உலகுக்கே ஒரு பேரிழப்பாகும். பிறப்பில் ஆங்கிலேயரான இவர் இங்கிலாந்தில்-வாழ்வதைத் துறந்து இந்தியாவில் குடியேறி இந்தியபிரஜையானுர். அதுமட்டுமன்றி, இந்தியப் பண்பாட்டிற்கு இயைய வேட்டி உடுக்கும் பழக்கத்தையும் மேற்கொண்டார் சில வருடங்களுக்கு முன்பு இவர் இலங்கைக்கு வந்தபோது இவரை அழைத்தவர்களுக்குஉணவைப் பொறுத்தமட்டில் ஒரு தனிப் பொறுப்பு ஏற்பட்டது இவர் சைவ உணவைச் சாப்பிடுவதால், இவருக்கு ஏற்றஉணவு ஒழுங்கு பண்ண வேண்டிய நிலைமை உண்டாயிற்று

உயிரியலில் ஒரு பிரிவான "ஜெனிடிக்ஸ்" என்ற துறையில் உலகிலேயே ஒரு ஒப்பற்ற நிபுணர் இவர். ("ஜெனிடிக்ஸ்" என்ற துறையில் பெற்ரேரின் இயல்புகள் எவ்வாறு குழந்தைகளுக்குச்செலுத்தப்படுகின்றன என்பது ஆராயப்படும்.) இவரின் தகப்பனுரும் ஒரு அறிவியல் மேதை. தந்தையைப் போல் தனயனும் வேத்தியல் சபையின் புலமைப் பரிசிலைப் பெற்றவர். எப். ஆர். எஸ். என்று அழைக்கப்படும் இப்பட்டம் நோபல் பரிசிலுக்கு அடுத்தபடியான நிலையில் மதிக்கப்படும் என்று கூறலாம்.

திரு ஹால்டேன் கல்கத்தாவிலுள்ள இந்தியப் புள்ளி விபர நிறுவனத்தில் தலைவராகப் பணிபுரிந்த பிறகு, புவனேஸ்வரிலுள்ள ஆராய்ச்சி நிலையத்தில் கடமை ஆற்றினர். உயிரியல் நிபுணரான யூலியன் ஹக்ஸ்லியுடன சேர்ந்து உயிரியல் பற்றிய புத்தகம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

**திருக்குறள்:**

உலகத்திலே அதிகமான மொழிகளில் பெயர்க்கப்பட்ட தனி பெரும் சிறப்பினை உடைய ஈடு இணையற்ற இலக்கிய நூல் திருக்குறள். சமயத் தொடர்பினை உடைய பைபிளும் குர்ஆனும் திருக்குறளைக்காட்டிலும் கூடுதலான மொழிகளிலே பெயர்க்கப்பட்டுள்ளன. திருக்குறள் தமிழ்மொழிக்கு ஓர் ஒப்பற்ற பெருமையினை அளிக்கிறது. "அறுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்"லே கூறப்படாதபொருளே கிடையாது என்றுல் அது சாலவும் பொருந்தும். அண்மையிலே இந்தோனேஷிய மொழியிலும் பாலிய மொழியிலும் பெயர்த்துள்ளனர். சிங்கள மொழியிலும் ஒரு பெண்மணி மொழிபெயர்த்துள்ளார் திருக்குறள் போன்ற இலக்கியச் செல்வங்களால் "என்றுமுள தென் தமிழ்" மென்மேலும் பரவி பல நாடுகளிலும் பரவி வளர்ந்து கொண்டு போகும்என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

— "சிவதி"

எப்படிச் செய்வது?

# 'கார்'

போக்குவரத்திற்கு சைக்கிளை அடுத்து முக்கியமானது கார்களே. கார்களுக்கு லாரிகள், ஸ்டேசன் வாகன்கள், ஜீப்புகள், ட்ரக்குகள், பஸ்ஸுகள் என்ற அநேக பந்துமித்திரர்கள் உண்டு. எல்லா ஊர்களுக்கும் ரயில் செல்வதில்லை. பஸ்கள் லாரிகள் இல்லாவிட்டால் போக்குவரத்து மிகவும் கஷ்டம். அநேக கிராமங்களில் நமது நாட்டின் முன்னேற்றத்தில் கலந்து கொள்ளவே முடியாது. பெரியநகரங்கள் இப்பொழுது விஸ்தாரமாகிக் கொண்டே வருகின்றன ஆகையால் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப்போக டாக்ஸிகள், ரவுன் பஸ்கள் இவைகளை நாடவேண்டியிருக்கிறது இவை முக்கியத்துவத்தை அறிந்துதான் பாரதத்தின் மூன்றும் திட்டத்தில் ஒரு லட்சம் கார்கள், பஸ்கள் உற்பத்திபண்ண திட்டமிட்டிருக்கிறுர்கள். இவ்வளவு உற்பத்தியும் நமது தேவைக்கு குறைவு. இந்த தொழிலில் இப்போது 140 கோடி ரூபாய்கள் முதலீடு இருக்கிறது. நான்காம் திட்டத்தில் 150 கோடி ஆக்க உத்தேசித்திருக்கிறுர்கள். நமது வாழ்க்கைக்கு இவ்வளவு அத்தியாவசியமான கார்களை எப்படி உற்பத்தி செய்கிறுர்கள் என்று அறிய வேண்டாமா?

அயல் நாடுகளில் இந்த தொழிலுக்குத்தான் அதி முக்கியத்துவம் இத்தொழிலால் பல உபரித் தொழில்கள் விருத்தி அடைகின்றன அமெரிக்காவில் டிட்ராயிட் என்ற நகரத்தில் தொழில்கள் எல்லாம் கார் உற்பத்தியில் சம்பந்தப்பட்டவைகளே. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான ரப்பர், எஃகு, பெட்ரோல், கண்ணாடி, வர்ணம் முதலிய தொழில்களின் வளர்ச்சி கார் உற்பத்தியின் அடிப்படையில் இருக்கிறது. இக்காலி நாட்டின் கார் தொழிற்சாலைக்கு சென்று கார் உற்பத்தியைப் பார்த்தால் ஒரே பிரமிப்பு ஏற்படுகிறது. அங்கு மொத்தம் 80 ஆயிரம் தொழிலாளர்கள். பத்தொன்பது தனித் தொழிற்சாலைகள் தினம் 2000 கார்கள் உற்பத்தி ஆகின்றன. அந்தத் தொழிற்சாலை முழுவதையும் காரிலேயே சுற்றி பார்ப்பதற்கு அரை நாளுக்கு மேல் ஆகிறது. நடந்து சுற்றி பார்க்க நம்மால் முடியாது அமெரிக்கத் தொழிற்சாலைகள் இதைவிடப்பெரியது.

நீங்கள் கார் உற்பத்தியைப் பார்க்க அமெரிக்காவுக்குப் போகவேண்டாம். இந்தியாவிலேயே தொழிற்சாலைகளைப் பார்க்கலாம். ஏன் நமது தமிழ் நாட்டின் தலைநகரிலேயே இரண்டு தொழிற்சாலைகள் இருக்கின்றன. போகும்போது அவைகளைப் பார்க்கலாம். அங்கு நாம் நுழைந்ததும் பார்ப்பது மெஷின் ஷாப், இங்கு தான் எஞ்சினுடைய முக்கியமான தலைப்பாகம் செய்யப்படுகிறது. ஓரிடத்தில் பெரிதும் சிறிதுமாக துளை போடுகிறுர்கள். மற்றோர் இடத்தில் மறைகள் போடுகிறுர்கள். ஸிலிண்டர் ஹெட் என்று பலவித பாகங்களைச்செய்து சேர்த்து இணைக்கிறுர்கள். இவைகள் எல்லாம் முடித்து அதை சோதிக்கிறுர்கள்.

எஞ்சின் ஒருபுறம் தயாராவதைப்போல மோட்டார் வண்டியின் 'பாடி' மறுபுறம் தயாராகிறது. பிரமாண்டமான யந்திரங்கள் இங்கு வர்ணப் பூச்சு நடப்பதைப் பார்க்கலாம். பிறகு உட்காரும் இடம், மெத்தை போன்ற பாகங்கள் எல்லாம் பொருத்தப்படுகின்றன. இத்துடன் எஞ்சினையும் டயரையும் பொருத்திஞல் வேலை முடிந்துவிடும்.

காரின் மெக்கானிக்கல் பாகங்களைப் பொருத்தும் இடத்தை இரண்டாகப் பிரித்திருக்கிறுர்கள் ஒன்று மெயின் அஸெம்ளி மற்ரென்று ஸப் அஸெம்ளி. இரண்டு பிரிவுகளிலும் பல சிறிய சாமான்களைச் சேர்த்துப்பொருத்துகிறுர்கள். இதற்குப் பல நிலையங்கள் இருக்கின்றன. இறுதிநிலை எஞ்சினைச் சேர்க்கும் கட்டம். கடைசியாக எஞ்சினையும் பாடியையும் இணைத்து பிறகு பாட்ரி, டயர், விளக்குகள் முதலியவைகளைப் பொருத்தும் இடம்.

இது தவிர டேல் ஷாப் உஷ்ண சிகிச்சை சாலைகளும் இருக்கின்றன. உஷ்ண சிகிச்சை சாலையில் பெரிய ராக்ஷஸ காளவாய் அடுப்புகளையும் உலை அடுப்புகளையும் காண்கிறேம். மோட்டாரின் பாகங்கள் இங்கு நெருப்பு ஸ்நானம் செய்து புனிதமடைகிறது. அடுத்து கியர் ஷாப்பில் எஃகு வளையம் ஒன்று சிலவிநாடிகளில் மூன்று உருவாகித் தானே நழுவி குளிர்ந்து தயாராகிவிடுகிறது. ஒருவேளை இதுதான் விஷ்ணு சக்கரமோ என்ற பிரமிப்பை அடைகிறேம். எல்லாம் ஒரே வேகம்.

'அடேயப்பா! எத்தனை சிறு சாமான்கள்! சுமார் ஐயாயிரத்துக்கு மேல் இருக்குமே இந்தத்தொழிற்சாலையில் இதையெல்லாம் சேர்த்துப் பிணைத்து உருவாக்குகிறுர்கள் பல சாமான்களை இங்கு செய்வதில்லை. பல்வேறு தொழிற்சாலைகளில் இவர்கள் சொல்லும் முறைப்படி செய்கிறுர்கள். அவைகளைச் சோதித்து இங்கு எடுத்துக் கொள்கிறுர்கள். ஆகையால் கார் தொழிலால் மற்ற சிறு தொழில்கள் வளர்ச்சி அடைகிறது இதை ஆங்கிலத்தில் ஆக்ஸிலரி தொழில்கள் என்று சொல்கிறுர்கள். இதொழிற்சாலையில் கார் முழு உருவத்துடன் வெளிவந்ததும் அதைப் பல தரம் பரீட்சை செய்கிறுர்கள். இதனுல் அதில் ஏதாவது குற்றம் குறைகள் இருந்தாலும் தெரியவரும். இது தவிர காரின் தோற்றத்தை அடிக்கடி மாற்றுகிறுர்கள். இதையெல்லாம் எப்படிச் செய்வது என்று ஆலோசிக்கவும் சோதனைகள் நடத்தவும் ஆராய்ச்சி இலாகா தனியாக இருக்கிறது ஆரம்பத்தில் கார் இருந்த மாதிரிக்கும் இப்பொழுது இருக்கும் மாதிரிக்கும் வித்தியாசம் நன்குபலப்படும் இப்பொழுது கார்கள் தாழ்ந்து அம்புபோல காற்றை ஊடுருவிக்கொண்டு வெகு வேகமாகச் செல்லமுடியும்

(இது வானெலிப் பேச்சின் சுருக்கம்)

— ஜி. வி. பட்டாபிராம்

---

நாம் நயந்து போற்ற வேண்டிய தெய்வங்கள் நமது நாட்டுமக்களே ஆவர். நாம் ஒருவரோடொருவர் பொருமை கொண்டு போராடுவதை ஒளித்து, ஒருவரை ஒருவர் போற்றி அன்பு செய்வோமாக!

— சுவாமி விவேகானந்தர்

---

## சிறுவர் பூங்கா

### ஈசன் அன்பைப் பெறுவோம்

— பா. அன்ட்று —

தம்பி பூச்சி பிடியாதே
தும்பி யென்று இகழாதே
சின்ன னென்று
எண்ணுதே
சீவன் உண்டாம்
தெரிவாயே.

வாலில் நூலைக்
கட்டாதே
வட்டம் போடப்
பார்க்காதே
துட்டச் செயலால்
பிறவுயிரை
துன்ப மடையச்
செய்யாதே

உள்ளத் தன்பு
தேவையடா
உயிரை ஓம்ப
வேணுமடா
பாசம் இல்லா
மனிதனிந்தப்
பாரில் பாவி ஆவானும்

வானம் பூமி வகுத்தவனே
வாழும் உயிரைப்
படைத்தவனும்
ஈனம் இல்லாச்
செயலாலே
ஈசன் அன்பைப்
பெறுவோமே!

★

### மயிலே ஆடு!

— ச. வே. பஞ்சாட்சரம் —

ஆடுமயில் ஆடு
அழகுவிரித் தாடு
கோடைவெயில் இல்லை
குதித்துநின்று ஆடு.

மாரி மப்பில் நின்று
வண்ணங் கொட்டி ஆடு!
கார மேகங் கண்டு
விரைந்து நின்று ஆடு!

மின்னல் பாயக் கண்டு
மெய்மறந்து ஆடு
இன்னும் இன்னும் நின்று
இடி முழங்க ஆடு!

மழை நனைக்க ஆடு
மகிழ்வளிக்க ஆடு
விளை வெடுக்க ஆடு
வெறி யெடுத்து ஆடு!

★

### தம்பி

— "நல்லை அமிழ்தன்" —

எங்கள் தம்பி நல்ல தம்பி
சிங்க நடை போடும் தம்பி
சிறு கதைகள் கேட்கும்
தம்பி
சிறுவர் பூங்கா படிக்கும்
தம்பி.

○

பள்ளிக் கூடம் செல்லும்
தம்பி
புள்ளி நூறு வாங்கும் தம்பி
துள்ளி குதித் திரியும் தம்பி
புத்தி சாலி எங்கள் தம்பி

---

## (ஆரும் பக்கத் தொடர்ச்சி)

### பைந்தமிழ்ப் பூங்கா

சிறந்த முறையில் நடைபெற்று வந்தது.

'சாலிநெல்லின் சிறைகொள் வேலி ஆயிரம் விளைவுட்டாக காவிரி புரக்கும் நாடு'

வேலி ஒன்றுக்கு 1000 கலம் விளையும் நாடாக இருந்துள்ளதை இதன்மூலம் நாம் காணலாம்

முத்தமிழ்நாட்டின் அழகு:- 269 அடிகளைக் கொண்ட சிறுபாணுற்றுப்படையில் சேர நாட்டின் செல்வத்தையும் பாண்டிநாட்டின் பெருமையையும் சோழநாட்டின் செழிப்பையும் ஒருசேர நாம் காணலாம். இந்நூலில் கடையெழுவள்ளல்களின் வரலாறு, நல்லியக்கோடன் ஆண்மை, கொடை ஆகியவைகளை இந்நூலில் பார்க்கலாம்.

வறுமைக்காட்சி:-

வறிய பெண்மணி குப்பையிலே பயிரான வேளைக் கீரையை கூர்மையான நகத்தினுல் கிள்ளியெடுத்து உப்பில்லாமல் வேகவைத்து அக்கம் பக்கம் உள்ளவர்கள் பார்ப்பதற்கு நாணி வாயிற் கதவைச் சாத்தித் தானிட்டு உள்ளே நிறைந்த சுற்றமுடன் உட்கார்ந்து அதனை உண்டாள் என வறுமைக் காட்சியை இந்நூல் அழகாகச் சித்தரிக்கிறது.

"பொருநர்க்காயினும்
புலவர்க்காயினும்
அருமறை நாவின்
அந்தணர்க்காயினும்
கடவுள் மால்வரை
கண் விடுத்தன்ன
அடையாவாயிலவன்
அருங்கடை குறுகி"

என நல்லியக் கோடனின் பெருமையைச் சிறப்பாகப் பாராட்டுகின்றது.

சுவையான உணவுகளை அழகாகக் கூறும்சால்:-

500 அடிகளைக் கொண்ட கடியலூர் உருத்திரங்கண்ணனுர் காஞ்சிக்குச் செல்லப் பாணனை வழிப்படுத்தும்போது ஆங்காங்கு கிடைக்கும் உணவு வகைகளை அழகாகச் சித்திரித்துச் செல்கிறுர். இந்நூலில் மாளிகைகளும் இல்லங்களும் வருணிக்கப்படுகின்றன. குடிசைகள் காட்சி, கூறப்படுகின்றது. திருவெஃகாவிலே திருமால் பள்ளிகொண்டிருக்கிறுர். காஞ்சிமாநகரம் தமிழ்நாட்டின் பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது. இளந்திரையனின் செங்கோல் எடுத்தியம்பப்படுகிறது.

முல்லையில் பெண்கள் குடும்பத்தையும் ஓம்பி பொருளாதாரத்தை வளம்படுத்த வகை செய்வதை இந்நூலில் நாம் காணலாம் மோர் விற்றதனுல் கிடைத்த நெல் முதலியவற்றுல் சுற்றத்தார் எல்லோரையும் உண்ணச் செய்கிறுள். நெய்யை விற்கின்ற பணத்துக்கு கட்டியாகிய பசும்பொன்னை அவள் வாங்குவதில்லை. அவ்விலைக்கு எருமையினையும் நல்ல ஆன்களையும் வாங்கித் தன் தொழிலை பெருக்குவதை ஆசிரியர் அழகாகக் கூறிச் செல்கிறுர்.

இந்நூலில் பரந்து காணப்படும் சுவையான உணவுகளில் ஒன்றை மட்டும் இங்கு காண்போம்.

அந்தணர் குலத்து நங்கை அருந்ததியை ஒக்கும் கற்பினையும் நறிய நுதலையும் உடையவள். அப்பார்ப்பனி பதமறிந்து சோற்றை ஆக்குகிறுள் கொம்மட்டி மாதுளங்காயோடு மிளகுப் பொடியைக் கலந்து நறிய மோரின் கண் கிடந்த வெண்ணெயிலே வேகவிடுகிறுள் பின் கருவேப்பிலை நறு இலை அளாவப்பட்ட பசியகொத்துக்களையுடைய நெடியமரமாகிய மாவினது நறியவடுவினைப் பலவாகப் போட்ட அழகுமாட்சிமைப்பட்ட ஊறுகறியினுேடும் இன்னேரன்ன கறிகளுேடும் விருந்தினரை உபசரிக்கிறுள்.

இவ்வண்ணம் ஆற்றுப்படையில் அழகுறத் தீட்டப்பட்டுள்ளனவற்றை விரிக்கின் பெருகும். இவ் ஆற்றுப்படையின் தமக்கெனவாழாப் பிறர்க்குரியாளர் தமிழர் என்பதை தனி அழகுடன் எடுத்தியம்புகின்றன. "யாம பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்" என, ஆற்றுப் படைகள் அழைத்துச் செல்லும் விரிந்த பாதையில் நாமும் நடந்துசெல்வோம்.

---

### குடையும் கிழவனும்

'எக்ஸ்பிரஸ்' பஸ் ஒன்று வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. ஜனங்களோ கிழங்கு அடுக்கிறுற் போன்று அடுக்கிவிடப்பட்டிருந்தனர் சீட்டில் இருந்த கிழவன் ஒருவன் தான் இறங்க வேண்டிய இடம் கிட்டிவிட்டபடியால், மணியை அடித்து விடும்படி நின்றுகொண்டிருந்த ஜனங்களிடம் சொன்னுன். கிழவன் வார்த்தைக்கு ஒருவரும் செவிசாய்க்கவில்லை. உடனே கிழவனுக்கு ஒரு யுக்திதோன்றியது. அவன் வைத்திருந்த குடையின் பிடியால் மணிகட்டியிருக்கும் கொடியை இழுத்தான். மணி அடித்தது. சிறிது நேரத்தில் பஸ்ஸும் நின்றது.

பஸ் நின்ற பின்னரும் தொடர்ந்து மணியடிக்கும் சப்தம் கேட்கவே, கண்டக்டருக்குச் சினம் வந்துவிட்டது.

"யாரப்பா, பஸ் நின்றது தெரியவில்லையா!"

டிங்...டிங்...—மணி தொடர்ந்து ஒலித்தது

கண்டக்டரின் கோபம் உச்சக்கட்டத்தையடைந்து விட்டது. கிழவனுக்குப் பக்கத்தில்வந்து, 'இதென்னையா உன்னுடைய வீடென்று நினைப்பா, நான் சொன்னது காதில் விழவில்லை!"

"அடபோய்யா, நீ ஒண்ணு குடைமாட்டுப்பட்டுக்கொண்டு நான்படுகிற சங்கடம்... கொஞ்சம்பொறு" என்று கிழவன் கூறிவிட்டு கயிற்றில் மாட்டிக்கொண்ட குடையை எடுக்கதொடர்ந்து முயன்று கொண்டிருந்தார்

டிங்...டிங்...

—சுரஸ்
கண்டிக்குழி

---

## நத்தையின் யுக்தி

— ஞானம் பீரிஸ் —

ஒரு காட்டில் முயலும் நத்தையும் மிகவும் நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்துவந்தன. ஒரு நாள் மாலை ஒளிந்துவிளையாட ஆசைகொண்ட நத்தை, முயலிடம் சென்று, "எனது பிரிய நண்பனே இன்று நாம் ஒளிந்து விளையாடுவோம், வருவாயா!" என்று ஆசையுடன் கேட்டது. இதைக் கேட்டதும் முயலுக்கு மிக்க மகிழ்ச்சி. ஆனந்தம் அலைமோதியது. "இந்தச் சிறிய நத்தையா என்னைக் கண்டுபிடிக்கப் போகின்றது" என்று மனதில் ஏளனம் பொங்க, "ஓயெஸ், நான் ரெடி" என்றது.

நத்தைக்கும் ஒரே மகிழ்ச்சி. "என் அருமைநண்பனே, முதலில் நீயே ஒளித்திரு, நான் கண்டுபிடிக்கிறேன். பின்பு நான் ஒளித்துக்கொள்கிறேன்" என்றது நத்தை. உடனே முயலும், நத்தையைக் கண்களை மூடிக்கொண்டிருக்குமாறு கூறிவிட்டு, பக்கத்திலுள்ள பற்றைக்குள் பதுங்கிக்கொண்டு "ரெடி" என்று ஓசைகொடுத்தது. கெட்டித்தனமுள்ள நத்தை தன்னுடைய சாமர்த்தியத்தால் பற்றையினுள் பதுங்கியிருக்க முயலைக் கண்டு பிடித்துவிட்டது!

பின்பு நத்தையின் முறை வந்திடவே, முயல் தன் கண்களை மூடிக்கொண்டிருக்கும் சமயம் பார்த்து கூடாரம் போன்ற தன் ஓட்டுக்குள் ஒளிந்துகொண்டது.

முயலும் தேடத் தொடங்கி பல மணி நேரமாகியும் காணுது கவலையுடன் "நண்பனே, என்னுல் கண்டுபிடிக்க முடியாது; எங்கிருந்தாலும் வந்துவிடு" என்று ஓலமிட்டது. இதைக்கேட்ட நத்தை மிக்க மகிழ்ச்சியுடன் வெளிவந்து, "சிரித்தவாறே" நண்பா, நான் உன்னை வென்றுவிட்டேன்" என்று கூறி, துள்ளிக்குதித்தது.




— கவியோகி சுத்தானந்தபாரதியார் —

## காட்சி — 8

### பொறுமைத் தீ

மெர்ரிஜேன்: இந்த இந்தியன் அழகாய் இருக்கிறான்... ஆங்கிலம் நன்றாகப் பேசுகிறான், பணம் வைத்திருக்கிறான்; எனக்கு அவன்மேல் பிரியம்... அவனுக்கு...? அவளை, இந்த இந்தியக்குமரி காந்தம்போல் இழுக்கிறாள்; அவளை அவனும் நேசிக்கிறான்; ஆதலால் என் காந்தம் வடக்கும், வடக்கும்போலப் பற்றவில்லை; அதைத் தெற்கு முனைக்குத் திருப்பவேண்டும்... இவளைப் பிரிக்கவேண்டும் அல்லது ஒழிக்கவேண்டும்... இந்தியக் கன்னியின் கண்ணழகு, மூக்கழகு, முத்துப்பல்லழகு, மார்பழகு, அவள் வடிவழகு, உடையழகு, நடையழகு...ஹூம்...! பார்க்கப் பார்க்கப் பொறுமை ஏறுகிறது... (கண்ணாடி பார்க்கிறாள்) என்முகம் அழகில்லையா, என்ன... (பவுடர் தடவி உதட்டுச்சாயம் பூசி, புருவத்தில் கறுப்புத் தடவுகிறாள்) இதோ வருகிறான்...

(வருதல் தேவகி)

தேவகி: (மனதுள், இவள் குரங்கு மூஞ்சியும் உதட்டுச் சிவப்பும்...)

மெர்ரி: கமான், கமான், மை டவ்... (மனதுள், இவளைப் பார்த்தாலே பிடிக்கவில்லை... கண்ணைப் பாரு, அண்டங்காக்காய்மாதிரி...) உன் கண்கள் அல்லிபோல் இருக்கின்றன...

தேவகி: (மனதுள்: உன் பூனைக்கண்ணோ, லட்சணமோ...) மெர்ரி, உன் அழகே அழகு...

மெர்ரி: மை டியர் டவ்...உன் குரல் கிளிகொஞ்சுகிறது... (மனதுள்: உன் டமிலோ, லட்சணமோ...? குழுகுழா, ட்றடறு...ன்னு)

தேவகி: மெர்ரி, நீ கிளியைப் பார்த்திருக்கிறாயா...?

மெர்ரி: லண்டன் காட்சியில் பார்த்தேன்... பிறகு உன்மூக்கில் பார்க்கிறேனே... நீ இராந்தேல் பார்த்தாயா...? அது வசந்தத்திற்கு வசந்தம் வரும்...

தேவகி: (மனதுள்: நான் கிளிமூக்கு, இவள் சளிமூக்கு... நான் குண்டுமூஞ்சி, இவள் குரங்கு மூஞ்சி... நான் கமலக்கண், இவள் காமாலைக்கண்...) அடி, மெர்ரி...! உன் முகம் சொரி...

மெர்ரி: (மனதுள்: உன் கூந்தலும் பல்லும் நீக்ரோ மாதிரியிருக்கு...) இந்திய அழகு எனக்குப் பிடித்திருக்கிறது.... (மனதுள்: உன் அழகை ஆந்தைதான் மெச்சவேண்டும்...) இதோ, என் காதலன்...!

(வருதல், அமுதன்)

மெர்ரி: அம்டன்...அம்டன்...

தேவகி: தனியே, என்ன அமுது, இந்த வெள்ளைப் பிசாசுக்கு அதிக இடம் தந்தாய்... அது உன் இரத்தத்தை உறிஞ்சுமே...

மெர்ரி: உ ஆபாசமே... என் காதலனுக்கு என்ன ஓதுகிறாய்...

தேவகி: உன் (மூக்கின்) வடிவழகையே ஓதுகிறேன்... போடி, லண்டன் மூதேவி...

மெர்ரி: மை டியர் அம்டன், வா என்னுடன்...! உனக்குப் பெரிய இன்பம் காத்திருக்கிறது....

அமுதன்: தங்காய், உன்னை நான் நேசிக்கிறேன், ஆனால் காதலிக்கவில்லை...

மெர்ரி: உன்னை நான் காதலிக்கிறேன், நேசிக்கவில்லை... நீ என் மூன்றாம் காதலன்...

அமுதன்: எனக்குப்பிறகு எத்தனை காதலரோ...

தேவகி: இந்த வெள்ளை நரகத்தில் விழாதே... முகம் வெறுப்பு, அகம் கறுப்பு; பவளவாய் தொண்டை நாய்; உஷார் அமுது...! இந்தியர் பலர் இந்த பிடாரிகள் வலையில் விழுந்து கைமெலிந்து உடல் மெலிந்து மனமுடைந்து எமலோகம் போகிறார்கள்... கவனம்...

மெர்ரி: என்னடீ ஓதுகிறாய், என் காதலனிடம்...

தேவகி: பைபிள் ஓதுகிறேன்... பைபிளில் "பெண்களை மனதில் நினைப்பதும் விபசாரம்" என்றிருக்கிறதே...

மெர்ரி: அது, உன்னைப் போன்ற பெண்களுக்குச் சொன்னது... என்போன்ற உத்தமிகளுக்கன்று...

தேவகி: அடீ, ஊர்சுற்றும் உத்தமியே... உன்னைத்தொட்டவனைப் பரலோகத்திலுள்ள பரமபிதாதான் காக்கவேண்டும்... என்ன அமுதம், சொக்கிநிற்கிறாய்...!

மெர்ரி: அம்டன், நீ யாரைக் காதலிக்கிறாய்... பார் என் அல்லிமுகத்தை... அழகுத் திருவை... காதலா, ஆசைக் காதல...

தேவகி: ஆசைக்குள்ளே வேசை... வெள்ளைக்குள்ளே சள்ளை... கவனம், கவனம்...! நமது காதலைக்கலைக்கும் சூர்ப்பனகை...

மெர்ரி: என்ன, சூப்பர் நகையா...

தேவகி: ஆமடீ லண்டன், நீ சூப்பர் சூர்ப்பனகை... நகை என்றால் புன்சிரிப்பு, லாஃப்...

மெர்ரி: ஹ...ஹ...ஹ... அப்படிச்சொல்லு... நான் சூப்பர் நகை – உயர்ந்த புன்னகைச் செல்வி... (கண்ணாடி எடுத்துப் பார்த்துக்கொண்டு உதட்டுச் சாயம் தடவுகிறாள்... அப்போது போலிப்பல் நழுவுகிறது)

தேவகி: நல்ல மேக்கப்... நல்ல நடிகை... அடி அழகி, உன் முத்து உதிருகிறதடீ... (போலிப்பல்லை இழுக்கிறாள் – அத்தையும் சொத்தையுமாக வாய் நாறுகிறது)

அமுது: மூக்கைப்பிடி...! பார், சாணவாய் அழகு...!

மெர்ரி: நான்ஸென்ஸ்...! டெவில்...! என் அழகைக் கெடுத்தாள்... தேள்...

தேவகி: அடீ "பூனைக்கண்ணி, பொசகை வயீ, ஒயின் மயக்கீ, உடல் மினுக்கீ..." (பாடுதல்)

மெர்ரி: என்ன சொல்லுகிறாள், அம்டன்...

தேவகி: எல்லாம் உன் மோகன வெறியின் வர்ணனைதான்...

மெர்ரி: என்ன காதலா, மம்மியாளும்... இந்த இந்திய டெவில் என்னென்னவெல்லாம் பேசுகிறாள்... இவளை என்னப்பன் எதற்கு அழைத்துவந்தான்... உன்னைமட்டும் அழைத்து வந்தால், ஆகாதோ...? வா, என்னுடன்...

(கையைப் பிடிக்கிறாள்)

அமுதன்: தேவகீ, கொடு கையை! மெர்ரீ, இப்போது இரண்டு ஆபத்துகளுக்கு நடுவே சிக்கினேன்... இவள் தெரிந்த ஆபத்து... நீ தெரியாத ஆபத்து...

மெர்ரி: நானு ஆபத்து, நான் சம்பத்து......

தேவகி: நீ விபத்து .........

அமுதன்: நீ சும்மாவிரு, தேவகி...மெர்ரி, எனக்கொரு பாட்டு வருகிறது......அதைப் பாடி நடனமாடுவோம்...பிறகு வந்த காரியத்தைக் கவனிப்போம்......வேலை தலைக்குமேல் குவிந்திருக்கிறது ...... நான் இங்கே காதலுக்கு வரவில்லை... கடமைக்கே வந்தேன்... நாம் அணு ஆராய்ச்சி செய்கிறோம்... அதைவிடப் பெண்ணாராய்ச்சி டலமானது ...... அணுகுண்டைவிட ஆபத்து. ஆசைகுண்டு...

மெர்ரி: காதலா, முதல் அணுகுண்டு இவன்மேலே போடு......

அமுதன்: பத்து ஆண்கள் சேர்ந்திருப்பார்கள், இருபது ஆண்கள் இணைந்திருப்பார்கள்; இரண்டு பெண்கள் கூடினால், இரவும் பகலும் சண்டை ஓயாது... இந்த உண்மையைக் கண்டேன்... இருந்தாலும், இருவரும் நேசமாயிருங்கள் ......

(பாடி ஆடுகிறான்)

"மேற்கும் கிழக்கும் ஜோடி கூடி
மின்னல் நடனமாடுவோம்......
மேற்கின் அறிவும் கிழக்கின் அன்பும்
மேவி யின்பந் தேடுவோம்...

(பாட்டு: சக்தி வளருது மேற்கினிலே...வருதல், டிங்டிங்)

டிங்டிங்: டான்ஸ் வெறிநைஸ், அம்டன்...! போதும் ஆடல்......போர வேலைக்கு...... சைக்ளோட்ரோனில் யுரேனியத்தைப் பொடிசெய், போ...!

அமுதன்: வந்தனம், லார்ட்......! அன்னமும் கிளியும் சண்டைபோட்டன; சமாதான நாட்டியமாடினோம்...

டிங்டிங்: சமாதானம் நமக்கில்லை...போர், குண்டு, புகை... இவையே நாம் அறிந்தவை... வா...வா...வா, தேவகி......!

தேவகி ஐய, தங்களிடம் தனித்து பேசவேண்டும் ...தங்கள் மகள் மகா துடுக்கு...

டிங்டிங்: எங்கள் ஐரோப்பியப் பெண்களே, அப்படித்தான்... இந்தியப்பெண் பூனை, வெள்ளைப்பெண் அழகான புலி... (செல்லல்)

மெர்ரி: ஒரு போர்வந்து இவர்கள் ஒழியவேண்டும்... ரசாயனச் சாலைக்குச் செல்கிறேன்...!

(கையை நெரித்துச் செல்லல்.)

## காட்சி—9

(அணுச்சாலை; சோதனைகள் நடக்கின்றன... அணுமுறி இயந்திரம் வேலைசெய்கிறது...... 3000 செ. மீ. சூடுள்ள வாலைகள் வேய்கின்றன...தேவகி, அமுதம் இருவரும் அணுக்களைத் திரட்டிப் புட்டிகளில் அடைக்கின்றனர்......)

தேவகி: (மூஞ்சியை சுளித்து) அப்பா, காரமடிக்கிறது......இந்த காரத்தைவிட, இவர்கள் அகங்காரம் நரகத் தீபோல் எரிகிறது...இதென்ன வேலை! கிட்டப் போனால், உடல் வெந்துபோகும்...

(வருதல் டிங்டிங்)

டிங்டிங்: என்ன, குவான்டன் தியரி என்ன செய்கிறது...?

தேவகி: பினாங்கு கண்டுபிடித்த கறுப்புக்கதிர் வெள்ளை மூளையைத் துளைக்கிறது......

டிங்டிங்: ஹ...ஹ...ஹா...மைலவ்லி டவ்!......இப்போது வெளுப்புக் கதிரை உன்கருப்பு விழிகளில் ஏற்றுகிறேன்...

(கண்களைத் தடவிக்கொடுக்கிறான்...பின்னால் இருந்து மெர்ரிஜேன் படம்பிடிக்கிறாள்)

மெர்ரி: பழிவாங்குகிறேன், பார்...!

டிங்டிங்: ஹலோ, மை டவ்...! அணுவிஞ்ஞானத்தில், நீ மிகவும் தேர்ச்சிபெற்றாய்...பிரான்சில் போர் மூளப்போகிறது... என்மகள் அணுகுண்டு விமானத்தில் செல்லப்போகிறாள்... உனக்கும் அழைப்பு வரும்; தயாராயிரு...! (டிங்டிங் செல்லல்—மெர்ரி அவனைத் தொடர்கிறாள்.)

மெர்ரி: அப்பா, ஒரு வேண்டுகோள்...... கலேயில் போர் மூண்டதாகத் தெரிகிறது...... என்னையும் அம்டனையும் ஒரே அணுச் சோதனைச் சாலையில் சேர்ந்து வேலைசெய்யும்படி ஏற்பாடு செய்; நான் அவனைக் காதலிக்கிறேன்...

டிங்டிங்: டவ்...!

மெர்ரி: அவளைப் பார்த்தால் எனக்குப் பிடிக்கவேயில்லை; அந்த குவான்டத்தை அபாயமான குண்டுமுனைக்கு அனுப்பு; அவள் ஒழியட்டும்...! அவள் என் வாழ்க்கையில் குறுக்கிடுகிறாள்...

டிங்டிங்: நான் சிபார்சு செய்ய முடியுமா; அவ்வளவுதான்...... மற்றபடி சர்க்கார் உத்தரவுப்படி... (டிங்டிங் மகளுடன் செல்லுகிறான் - வருதல், அமுதம்)

அமுதம்:

"அணுகுண்டுச் சாலையிலே-பதினாயிரம் டிகிரிநெருப்பினிலே...
பணி செய்யும் அடிமைகளைக்—கண்
பார்த்து நீ விடுதலை தந்திடுவாய்...
துணிவுடன் கூறுகின்றேன்—இங்கே
தொல்லையின் துயரமும் எல்லையில்லை...
பணிவுடன் வேண்டுகிறேன்—எங்கள்
டயம்தவிர்த் தருளுவாய் பரம்பொருளே...!"

தேவகி: அமுதம், அமுதம்...! பரம்பொருள நம்மைக் கைவிடமாட்டார்; உலகில் கடவுள் இருப்பது உண்மையானால், தருமம் நிற்பது உண்மையானால், இந்தக் கொலைகாரர்கள் அரசியல் அரங்கில் வெறிநடனம் புரிவதைத் தடுக்க மாட்டாரா...? அமுதம்... தெரியுமா செய்தி...! போர் மூண்டதாம்...!

அமுதம்: தெரியுமம்மா, தெரியும்...! அமெரிக்கப்படைகளும் ரஷ்யப் படைகளும் மோதுகின்றன...கிழக்கு ஜெர்மனியும் மேற்கு ஜெர்மனியும் யுத்தச் சூதாட்டத்திற்குப் பகடை உருட்டிவிட்டன... மாஸ்கோவிலிருந்து சென்றமாதம் போலிச் சந்திரன் பெரிய ராக்கெட்டுடன் பறந்து அமெரிக்காவை உஷார்ப் படுத்திச் சென்றது; அதன் பிறகு "லெய்கா" போன்ற பல நாய்கள் ஏறிய, பல பெரியபோலிச் சந்திரன் பறந்து உலகிற்கு எச்சரிக்கை தந்தது...சென்ற வாரம், "ஜேடா" என்ற ஹீலியம் கதிரவன், உலகைச் சுற்றிவந்தது...எங்கேயோ ஒரு குண்டு விழுந்ததாம் ... மறுநாள் இன்னொரு குண்டு பறந்துவந்து கலிபோர்னியாவில் வந்து வீழ்ந்ததாம் ... உடனே அமெரிக்க வேட்டை விமானங்கள் அணுகுண்டுகளையும் ஹைட்ரஜன் குண்டுகளையும் தாங்கிப்புறப்பட்டன. ரஷ்யப்பகுதிகளிலிருந்து ஒரு பலமான குண்டு சடாரெனப்புறப்பட்டது. அது அமெரிக்காவைக் கலக்கிவிட்டது. மாஸ்கோவில் ஒரு ரகசியமான சுரங்கத்திலிருந்து விசையை அழுக்குகிறார்கள்... அது சடாரென்று அணுகுண்டை 500 மைல் போய் விழும்படி செய்கிறது...

தேவகி: இந்த ஆச்சரியங்களெல்லாம் பழங்கதையாய்விட்டன. காஸ்மிக்ரே என்ற கொலைகாரக்குண்டு, ஆளை அப்பளமாக்குகிறது. உலகில், வாழ்வின் நிலை என்ன? ... உளமட்டில் மகிழ்ச்சிகொண்டு, ஊருக்கு உழைத்துழைத்துப் பலருக்கு நன்மையாக வாழ்ந்து செல்லவேண்டும்; ஊற்றைப் போலவும் ஆற்றைப் போலவும் கடலைப்போலவும் கதிரைப் போலவும், மலையைப் போலவும், வாழவேண்டும்...

அமுதன்: வேண்டும்...வேண்டும்...மீண்டும் மீண்டும் வேண்டும் ... உலகக் கோவிலுக்கு உள்ளின்பம் உண்டாகும் கலைத் தொண்டைச் செய்து வந்தோம், இப்போது எண்டுகோட்டுக் கோவிலை இடிக்கும் கொலைத்தொண்டில் விதி நம்மைப் புகுத்திவிட்டது ... அணுசக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்தலாகாதா? ... பண்பாடு இல்லாத அரக்கர் கூட்டம், இரக்கமில்லாத அரசியல் கூட்டம், வாழ்வுக் கலையை உலைத்துவிட்டது புத்தியில்லாமல் போர்க்களத்தில் இரத்தச் சேற்றில் புரள்கிறது. தேவகி, இதோபார்!...உத்தரவு; நான் அணுகுண்டு விமானத்தில் செல்லு, குறிபார்த்து விசையை அழுத்த வேண்டும் ...குண்டு எங்கே விழுமோ, எத்தனை பேர் இறப்பார்களோ, தெரியவில்லை... தேவகி, என்மனம் திடுக்கிடுகிறது! ... ஏன் இப்படி வெள்ளைக்காரர்களுக்கு வெறி பிடித்திருக்கிறது?... வெள்ளை மூளையின் இரத்தம் கொதிக்கிறது; விஞ்ஞானத்தின் நரகத்தீ பற்றி எரிகிறது — அமைதியாக இந்தியாவில் ஆண்டவனைத் தொழுதுகொண்டிருந்த நம்மையும், குண்டுவெறி பிடித்த விஞ்ஞானிகளால் இந்தக் கதி வந்தது! ... இனி எனது அருமை காட்டைப் பார்ப்பேனா!...அல்லது போர் நரகத்தில் இறப்பேனோ, அறியேன்!... (வருதல், டிங்டிங்)

டிங்டிங்: அவசரம், அவசரம்!... அம்டன், அம்டன்!... புறப்படு, புறப்படு! ஏ, மை டவ்!... நீ பாரிஸுக்குப் பறக்கவேண்டும்; அங்கே உனக்கு ஹைட்ரஜன் சாலையில், வேலையுள்ளது; ஏ அம்டன், நீ நேராக விமானப் படைத் தலைவனைப் பார்க்கவேண்டும்; அவர் உனக்குக் கட்டளையிடுவார்; அதன்படி நட! ... க்விக், க்விக்! ... விரைவு, விரைவு!... மோட்டார்

(8ம் பக்கம் பார்க்க)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
● பெனியன்கள்
● ஸ்போட் சேட்டுகள்
● ரி சேட்டுகள்
● கால் மேசுகள்
(Nylon & Woolen)
லேடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்
7, ஆஸ்பத்திரி வீதி :: :: யாழ்ப்பாணம்

## ஞாயிறு கதை மலர்

# முடிந்த வாழ்வு

— எஸ். சண்முகநாதன் —

ஏதேச்சையாகப் பத்திரிகையைக் கண்ட அவளது கண்கள் அதிலேயே பதிந்து நின்றன. மின்னலாய் வெட்டி மறையும் எண்ணங்களின் இயக்கத்தால் கைகள் அதை எடுத்தன. விழிகள் கடைசிப் பக்கத்திலேயே வந்து தங்கி நின்றன. பார்த்துக்கொண்டே இருந்த விழிகளில் நீர் திரையிட்டது. கறுத்த அந்தப் பெரிய எழுத்துக்கள், கண்களில் மின்னும் கண்ணீரில் கலந்து உருவங்கலைந்து மங்கித் தோன்றியது.

அந்தக் கண்களில் நிறைந்த எழுத்துக்களில் அவளது இதயமே நின்றுவிட்டதுபோல் செயலற்றது. அவளுடைய மெல்லிய பூவிதயம் தாங்கக்கூடிய இடியா அது? விதியின் கோரக் கரத்துள் அகப்பட்டு அழிந்துகொண்டிருக்கும் அவள் வாழ்வை உருத்தெரியாமல் அழித்துவிடும் செய்தியல்லவா அது! சிலந்தியைப் போல் எல்லாவற்றையும் இழந்தும் தொங்கிக்கொண்டிருந்த எதிர்காலத்தைப் பற்றிய அந்த மெல்லிய நம்பிக்கை இழையும் அறுந்துவிட்டது.

வாழ்வின் வட்டத்துள் அகப்பட்டு கலங்கி அழிந்துகொண்டிருக்கும் பிரேமா சிறிது நம்பிக்கையை மனதில் வளர்த்துக் கொண்டு, அதிலேயே இத்தனை காலமும் உலகத்தின் முகச் சுழிப்பையும் பொருட்படுத்தாமல் வாழ்ந்து கொண்டிருந்தாள். அந்த நம்பிக்கையையும் வாழ்வின் எதிர்காலத்தையுமே பாதித்துவிட்டது அந்தச் செய்தி.

தன் வாழ்வின் நம்பிக்கை அந்த எழுத்துக்களில் உடைந்து சிதறிப்போவதை உணர்ந்துகொண்டே பிரேமா பத்திரிகையை வெறுப்புடன் வீசியெறிந்தாள். பத்திரிகையைத்தான் வீசியெறிந்துவிட முடியும்; அந்த உண்மையை எறிந்துவிட முடியுமா? அந்த எழுத்துக்களைக் கண்களில் இருந்து அகற்றிவிட்டாலும் அது கொடுத்த அதிர்ச்சியையும் அது அறிவித்துவிட்ட வாழ்வின் எதிர்கால முடிவையும் அவளால் நெஞ்சிலிருந்து அகற்றிவிட முடியவில்லை.

அவளது நெஞ்சை வேதனை மூடிக்கொண்டது. சொல்லில் அடங்காத துயரம் அவளை ஆட்கொண்டது. நடுக்கடலில் அலையின் நடுவே அகப்பட்டவன், சிறு கட்டையைப் பற்றி அதுவும் கைவிட்டுப் போனவனுடைய நிலையில் அவள் கலங்கினாள்.

கண்ணீர் வடியும் கண்களுடன் தூரத்திலே மூலையில் கிடக்கும் அந்தப் பத்திரிகையைப் பார்த்தாள். கண்களில் வழிந்த வேதனை நெஞ்சிலே விம்மி நின்றது. சிதறிவிட்ட தன்னுடைய நம்பிக்கையை இன்னொரு பெண்ணிற்கு அளித்திருக்கும் வாழ்வை நினைந்த போது மனதில் துன்பத்தையும் மீறியதொரு சாந்தம் நிலைத்தது.

பிரேமா சுவருடன் சாய்ந்து கொண்டு அமர்ந்தாள். முழங்காலில் முகம் புதைத்திருந்தது, அழத்தான் அவளால் முடிந்தது. அன்பிற்காக ஏங்கியபோது ஆசை காட்டி மோசம் செய்தவன் இன்னொருத்தியுடன் இன்பமான வாழ்வை ஆரம்பித்துவிட்டான். அவளை அழவைத்த செய்தி அதுதான்.

அவளது நெஞ்சத்தில் நிறைந்த வேதனையினூடேயும் ஒளிவிட்டுப் பூத்த நினைவுகள் கலங்கிய இதயத்திற்குச் சுகம் கொடுத்தது.

— 2 —

பிரேமா பட்டணத்திற்கு வந்து கல்வி கற்றபோது, அவளை மட்டுமல்ல இன்னொன்றையும் கற்றுக் கொண்டாள். அதுதான் காதல். அவளது சமூகச் சூழல் அவளுக்கு அவகாசத்தைக் கொடுத்தது. வாழ்வில் வீட்டுக்குள்ளும் வெளியிலும் மலிந்துவிட்ட அந்தச் சரகளை அவளும் வாங்கிக் கொண்டாள். ஆனால் அதன் தரத்தைப் பாராமல் வெளி மயக்கில் மயங்கிவிட்டாள். அவ்வளவுதான்.

தன் மனம் காதல் வலையில் சிக்குமுன் அவள் தன்னுடைய வாழ்வை ஒருமுறை நன்றாகச் சிந்தித்துப்பார்த்தாள் ஆனால் பிரேமாவின் மனதில் அது விடிவில்லாத வாழ்வாகவே தோன்றியது. ஆகவே அதற்கு அவள் ஓர் விடிவை ஏற்படுத்த முயன்றாள்; விரும்பினாள். அதற்குக் காதல்தான் கைகொடுத்தது.

இளமையிலேயே அன்னையையும், தந்தையையும் இழந்துவிட்ட அவளுக்கு, வாழ்வில் பற்றிப் படர்வதற்கு கொழுகொம்பாக இருந்தவர் தாய் மாமன் மணியம்தான். அவர் தங்கையின் மகளைத் தன்பிள்ளையாக நினைத்துக் கொண்டார். அதனால் தான் அவரால் பிரேமாவை பட்டணம்வரை கல்விகற்க அனுப்பி வைக்க முடிந்தது.

அவள் பட்டணத்தில் படிக்கும்போதுதான் அவனைக் கண்டாள்; கருத்தைப் பறிகொடுத்தாள். அவனும் ஓர் அந்தஸ்தானவன். அதிக அழகில்லாவிட்டாலும், ஒரு பெண்ணின் மனதைக் கவர்வதற்கு வேண்டிய அளவிற்கு இருந்தது. அத்துடன் அவனிடம் இல்லாத அழகை அவன் பெயருடன் சேர்த்துக்கொண்ட பி. ஏ. என்ற இரண்டு எழுத்துக்கள் கொடுத்தன. வாழ்விற்கு வேண்டிய அளவுக்கு வருமானம் வரும் ஆசிரியத் தொழில். ஆகவே அவள் தன் மனதை இழந்ததில் வியப்பில்லை.

அவன்—சிவம்—கூறிய வார்த்தைகள் அவளுக்கு மயக்கத்தைக் கொடுக்காவிட்டாலும், மனதிற்கு ஆறுதலைக் கொடுத்தது. அவனை அன்பினால் பிணைக்கத்தான் அவள் முயன்றாள். காதல் என்றால் அது வெற்றிபெறும், அதுவும் புனிதமான அன்பால் இணைந்த இரு உள்ளங்கள் நிச்சயம் அடைவது ஆனந்தமாகத்தானிருக்குமென்று அவள் நினைத்திருந்தாள்.

ஆனால் அடைந்தது—?

ஒருநாள் அவனைக் கேட்டாள்.

"என்னுடைய வாழ்வு உங்களிடம் தான் ஆரம்பமாகுமென்று நான் நினைக்கவேயில்லை...... எங்கிருந்தோ வந்தேன்... இங்கே உங்களைச் சுற்றிப் படர்ந்து கொண்டதே என் மனம்..."

அவள் கூறிவிட்டு அவனைப் பார்த்தபோது, அவன் ஏதோ ஆழ்ந்து படிப்பதைப் போன்று புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தான். பிரேமா அவனிதழ்களில் மலரும் புன்னகைக்காக மூடாத விழிகளுடன் அவனெதிரிலே காத்திருந்தாள். அவன் லேசாகத் தலைநிமிர்ந்துபார்த்தான். ஆனந்தம் மலரும் அவளது கண்களைக் கண்டபோது, அவனையுமறியாமலேயே அவனிதழில் அரும்பாக மலர்ந்தது சிரிப்பு.

சிவம் கண்களை ஒரு நிலைப்படுத்தி அவளைப் பார்க்கும்போது உண்மையிலேயே அவள் அதில் அடிமையாகிக் கட்டுப்பட்டு விடுவாள். அந்த நேரத்தில் அவள் அவனது நிலைத்த விழிகளுள் மின்னும் கருவட்டத்துள் ஏதோ ஒன்று தன்னை அடிமைப் படுத்துவதையும் உணர்ந்துதான் இருந்தாள். அந்த உணர்வானது அவளது உள்ளத்தின் கோடி வரை சென்று திரும்பும்.

"நீ சொன்னயே எங்கிருந்தோ வந்தாய் என்று, அதைத்தான் விதி என்பது... நானும் எங்கோ இருந்து வந்தேன்... நமக்குள் உறவேது... ஆனாலும் ஒருவரை ஒருவர் விரும்பி அடிமைப்பட்டு விட்டோமே... அதைத்தான் அன்பு காதல் என்பது..."

பிரேமாவிற்கு அதைக்கேட்க இன்பமாகத்தான் இருந்தது. ஆனாலும் வெறும்பேச்சாலேயே வாழ்ந்துவிட முடியாதென்பதை உணர்ந்தவளாகையால் திருமணத்தைப் பற்றிப் பேச்செடுத்தாள்.

"நமது அன்பு உண்மையாக இருந்தால்... நிச்சயம் கணவன் மனைவியாக வாழ்வோம்..."

அவளைப் பார்த்தபோது அவன் முகம் சட்டென்று சுருங்கி மலர்ந்தது. அவள் கண்டுவிட்டாளோ என்ற தயக்கத்தால் அன்போடு குழைந்து பேசினான். அருகே வந்து அவளுடைய கூந்தலில் வருடியபடியே சொன்னான்:

"பிரேமா, நிச்சயம் நாம் ஒன்றுபடுவோம்... உலகத்தில் உண்மையான எதுவுமே தோல்வியடைந்தது கிடையாது. என்னைப் பொறுத்தவரை உனக்குக் கவலையே வேண்டாம்—ஆனால் உன் குடும்பத்தாரைச் சரிப்படுத்த வேண்டியது..."

அவன் கூறி முடிக்கு முன்னரே அவள் எழுந்து அவன் ஷேட்டைப் பிடித்துக்கொண்டு சொன்னாள்: "அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம்..."

அன்று அவள் நெஞ்சத்தில் புதிதாக ஒரு கோட்டை எழுந்தது.

— 3 —

அவள் சிவத்திடம் தனது குடும்பத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றுதான் சொன்னாள். ஆனால் அவள் கவலை முழுதும் தனது குடும்பத்தைப் பற்றித்தான் வார்த்தைகளால் சொல்வது சுலபம்; ஆனால் செயலில் எத்தனை கடுமையானது என்பதைப் புரிந்து கொண்டாள்.

அவளது ஆசைக்கிடையே மணியம் குறுக்கே தடையாக நின்றார். பிள்ளையில்லாத அவர் அவளைத் தான் தன் பிள்ளையாக நினைத்து வளர்த்தார். பாசத்தால் நிறைந்திருந்த அவரது உள்ளம் அவளது வாழ்வை அங்கீகரிக்க மறுத்தது. அவள் வாழ வேண்டும்; நன்றாக வாழவேண்டும். சகல சௌபாக்கியங்களுடன் அருமையான கணவனுடன்... தன் கண் நிறைய... மனம் குளிர... அவள் வாழவேண்டும். அதனைப் பார்த்துத் தான் பெருமைப் படவேண்டுமென்று நினைத்திருந்தார்.

அவளைச் சுற்றி தன் ஆசை எண்ணங்களால், உள்ளத்தால் அவர் கட்டிய கோட்டைகள் பல. அந்தக் கோட்டைகள், ஆசைக் கனவுகள் எல்லாம் உண்மையிலேயே கனவாக முடிந்து விடுமென்று அவர் நினைக்கவேயில்லை. நினைத்தது நடக்கவில்லை; நினைக்காதது தான் நடந்தது.

அந்தச் செய்தியை அவள் வாயாலேயே கேட்டபொழுது அவர் நிலைகலங்கி விட்டார். அவர் எதிர்பாராதது எதிர்கொள்ள வந்தபோது தயங்கவே செய்தார். அவள் கூறிய செய்தி அவர் நெஞ்சை அடைக்கச் செய்தது. தன் நிலையைச் சமாளித்துக்கொண்டார். கண்களில் முட்டிவரும் கண்ணீரைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார்.

"பிரேமா, நீ என்ன சொல்கிறாய்... வாழ்க்கை நீ நினைக்கிற மாதிரி லேசானதல்ல... அது ஆயிரங்காலத்துப்பயிர் ... உலகத்தில் உனக்கு அனுபவம் போதாது. அதைத்தீர்மானிக்க வேண்டியது நான்..."

சற்றுக் கோபமாகவேதான் கூறினார். பிரேமா கதவடியில் நின்று கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் மனதில் ஆத்திரமோ, கோபமோ இல்லை, அமைதியாகவே நின்றாள்.

தந்தையின் ஸ்தானத்தில் அவரை நிறுத்தி வைத்துப் பார்த்தபோது அவள் மனம் வருத்தப்படவில்லை. உலகத்தின் நிலையில் அவர் அப்படித்தான் பேசுவார் என்பது அவளுக்குத் தெரியும். வாழ்வில் இத்தனை காலமும் வளர்த்து, படிப்பித்து முன்னேற்றிவைத்தவர் பேசக்கூடாதா...? ஆகவே அவள் அமைதியாகக் கேட்டுக்கொண்டு நின்றாள்.

"மாமா... நீங்க சொன்னீங்களே... ஆயிரங் காலத்துப் பயிர் என்று. ஆனால் அதில் உங்களுக்கிருக்கிற அக்கறையை விட அதில் அடியெடுத்து வைக்கப் போகிற எனக்கிருக்காதா ... மாமா ... உலகத்தைப் பற்றி எனக்குத்தெரியும்...என் வாழ்வையும், நிலையையும் கூட அறிந்திருக்கிறேன். அந்தளவுக்குப் படிப்பிச்சிருக்கிறீங்க..."

பிரேமா கூறியதைக்கேட்ட மணியத்தின் கண்களில் வேதனையோடு கூடியஓர்பாசம் ஒளிவிட்டது. அதோடு நெஞ்சத்தில் அவளது வார்த்தைகளால் ஒருவித பெருமிதமும் ஏற்படத்தான் செய்தது. அவள் கூறிய வாழ்வின் அனுபவரீதியான பேச்சு அவருடலைச் சிலிர்க்கச் செய்தது.

"எவ்வளதான் அறிவிருந்தாலும்... கல்யாணத்தைப் பொறுத்தளவில் அறிவு போதாது. உன்னுடைய வாழ்வும் இங்குள்ள சில பிள்ளைகளுடையதைப் போலக் கெட்டுச் சீரழிஞ்சு போகக் கூடாது..."

கூறும்போதே அவர் நெஞ்சத்தில்,கடிதம்எழுதி—அதனால் இன்று வாழ்விழந்து நிற்கும்—சிலரின் பரிதாபக் கோலம் தோன்றியது. அந்த நிலை அவரின் பிரேமாவுக்கு ஏற்படவே கூடாது. அவர் கட்டிய ஆசைக் கனவுகளாலான கோட்டைகள் அழிந்துபோகக்கூடாது.

இத்தனை நேரமும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த பிரேமாவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. கலங்கிய கண்களுடன் அவரைப்பார்த்த போது, அவர் கலங்கிப் போய்விட்டார். பிரேமா அழுகிறாள். அவள் வாழ்வில் அழாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே இத்தனையும் கூறினார்... அவள் ஏன் அழவேண்டும்...?

"பிரேமா ஏன் அழுகிறாய்...? வாழவேண்டியவள் நீ... உனக்கெதிராக நான் எதையுமே செய்யமாட்டேன். ஆனால் வாழ்விக்க வேண்டியது என் பொறுப்பில்லையா...? உனக்கு விருப்பமென்றால் அவரையே கட்டிக்க... புதிதாக வந்த பந்தத்தில் இந்தக்கிழவனை மறந்துவிடாதே..."

துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். அதனைக் கண்ட பிரேமாவின் உள்ளத்தை ஏதோ செய்தது... தனக்காக வாழ்ந்த ஒருவர் அழும்போது எப்படி அவளால் இதனைப் பொறுத்துக் கொள்ள முடியும்? நெஞ்சில் வேதனையுடன் மகிழ்வும் குழம்பித் ததும்பியது.

ஓடிவந்தபிரேமா அணைத்துக் கொண்டபோது, அவர் தன் நிழலில் வளர்ந்த அவளை அணைத்துக்கொண்டார் அவள் அவரின் நிழலில் அமைதியாகக் கண்ணீர் வடித்தாள்.

— 4 —

அன்று பிரேமா நடக்கவேயில்லை; துள்ளித் தாவித்திரிந்தாள். இதயம் இசைத்தகீதம் வாயில் வார்த்தை வடிவம் பெறாமல் ஒலிவடிவாய் ரீங்காரமிட்டது. அவள் வாழ்விலே ஒரு பொன்னாள். இத்தனை காலமும் தவித்த இதயம் நிரந்தரமாய் சாந்தியடையும் திருநாள் அவள் வாழ்வு இன்றுதான் முகையவிழ்த்து மலரப் போகிறது. இன்பமும் துன்பமும் சூழ்ந்த இல்லற வாழ்வில் அடியெடுத்து வைக்கப்போகிறாள். அது அவள் நினைத்த மாதிரி மலர்ச்சோலையாகஇருக்குமா...?

அவளை வாழ்த்த அடுத்த வீட்டார் கூட வரவில்லை. மணியம் மட்டும் தான் இருந்தார். உலகத்தைப்பற்றி அவர் கவலைப்படவேயில்லை எத்தனை பழிகளை அவர் மீது சுமத்திப் பழித்தது. ஆனாலும் அவர் தலைநிமிர்ந்து நடந்தார். இத்தனைக்கும் மூலகாரணமான அவள் காதல் முழுமைபெறப் போகிறது...

விடிந்ததிலிருந்து அவள் எல்லாக் காரியத்தையும் சுறுசுறுப்பாய்க் கவனித்தாள். இன்னும் சில மணிநேரம் தான் இந்த வீட்டில் இருப்பாள்; ஆகவே அந்தப் பொழுதுக்குள் அந்த வீட்டில் தனக்குள்ள உரிமையை நிலைநாட்டுபவள்போல் ஓடி ஓடித்திரிந்தாள். மணியம் மட்டும் ஒதுங்கிநின்றார். அவர் அந்த ஊருக்குள் எப்படித்தலை நிமிர்ந்து நடந்தார். இன்று அந்தத் தலை தாழ்ந்துவிட்டது.

காலை மணி பத்து மட்டில் சிவம் வருவதாகக் கூறி இருந்தான். சரியாக வந்தான். அவனுடன் சகோதரியும் கூடவந்திருந்தாள். மணியம் தலை குனிந்தே இருந்தார். அவனைச் சரியாகக் கூடப்பார்க்கவில்லை. அவர்ஏன் பார்க்கவேண்டும்...? அவரால் குனிந்த தலை—மானம்—இனி நிமிரவா போகிறது...?

பிரேமா ஓடிக் குசினிக்குள் ஒளித்துக் கொண்டாள். இத்தனை காலமும் இல்லாத நாணம் அன்று அவளுக்கு வந்துவிட்டது. பிரேமாவைப் பொறுத்தமட்டில் அன்று அது திருமணநாள். ஆனால் அவனுக்கு எப்படியோ யாரறிவார்...?

அவனுடன் வந்தவள் மணியத்துடன் எல்லாவற்றையுமே பேசி முடித்துக் கொண்டாள். நமதுசமூகத்தில் வாழ்க்கைக்கு இரண்டு இதயங்களின் சம்மதம் மட்டுமல்லாது, இன்னும் எத்தனையோ சம்மதமும்தேவையாய் இருக்கிறது.

திருதிருத்த பார்வையுடன் சிவம் திண்ணையில் இருந்தான். அவனுடைய கவனம் இந்தப் பேச்சுக்களில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. அவனுடைய பார்வை மழைமூட்டத்தில் கப்பால் மங்கிய ஒளியைத் தேடுவது போல, வானில் நிலைத்திருந்தது. அவனின் அந்த நிலையைக் கண்ட பிரேமா தனக்குள் சிரித்துக் கொண்டாள். மனதில் கனவுகளுக்கு வானத்தில் உருத்தேடுகிறானோ என நினைத்த போதே அவள் மனதில் நாணம் மெல்லத்திரை விரித்தது.

(9-ம் பக்கம் பார்க்க)

## கார்த்திகைச் செங்காந்தள்

## சிறுகதை (8ம் பக்கத் தொடர்ச்சி)

மணியம் மெல்லப் பிரேமாவை அழைத்தார். அவனுடன் கூட வந்தவன் அவனை அழைத்துக்கொண்டு வந்தான். பிரேமா தயக்கத்துடன் நடந்துவந்தாள். அவள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் வாழ்வில் இன்பமான வழியைக் காட்டாதென்பது மணியத்திற்குத் தெரியும். என்றாலும் அது நல்ல-இன்பமான-பாதையைக் காட்டவேண்டுமென்று மனதுள் பிரார்த்தித்தார்.

அவளுடைய கைகளைப் பற்றிக்கொண்டார் மணியம். ஏனோ அவைகள் நடுங்கின. நான்கு கண்களும் கலங்கிக்கொண்டுவந்தது. இத்தனை காலமும் அந்த இரு உள்ளங்களையும் பிணைத்திருந்த பாசமென்னும் மெல்லிய இழை அறுந்து போவதை அந்த இரண்டு இதயமும் அறிந்தனவா?

மணியம் தன்னைச் சமாளித்துக்கொண்டு, அவளுடைய கைகளையும் பற்றி அந்த நான்கு கரங்களையு பிணைத்தார் அந்தப் பிணைப்பு வாழ்வு முழுதும் தொடரவேண்டுமெனப் பிரார்த்தித்தார் அந்தக்கணத்தில் அவளுடைய கண்களிலிருந்து இரண்டு சொட்டுக்கண்ணீர் விழுந்தது. அது ஆனந்தக் கண்ணீராய் இருக்கவேண்டுமென மனதுள் வாழ்த்தினார்.

அத்துடன் அவளது திருமணம் முடிந்துவிட்டது. வாழ்வு ஆரம்பமாகிவிட்டது. பயணம் தொடங்கிவிட்டது. அந்தத் திருமணத்திற்கு மேளம் இல்லை; மங்கல வாத்தியம் முழக்கவில்லை; தாலியில்லை; வாழ்த்துதற்கு ஆட்களைகூட இல்லை. ஆனால் அவளுடைய மனதில் எல்லாம் நடந்தன. கோடானுகோடி குரல்கள் தன்னை வாழ்த்துவதாக உணர்ந்தாள். அதற்குச்சாட்சி நாலைந்து உள்ளங்களும் எட்டுக் கண்களும் தான்.

அவன் போகவேண்டிய நேரம் வந்தது.

அவர் இதனை அறிந்துகொண்டபோது மனதுள் மௌனமாகக் கண்ணீர் வடித்தார். சிவம் எழுந்துவிட்டான். கூட வந்தவன் பிரேமாவைத் துரிதப்படுத்தினன். பிரேமா மாமன் முன் வந்து நின்றாள். அவள் முகம் வாடியிருந்தது. அவருக்கு அந்த வாடிய முகத்தை மலரச் செய்ய வழி தெரியவில்லை. அமைதியாகச் சிறிது நேரம் பார்த்தார். அந்தப்பார்வையில் ஏதோ படர்ந்திருந்தது. அதை இனங்கண்டு கொள்ள அவளால் முடியவில்லை. இருவருடைய மனமுமே கலங்கிக் குழம்பிக் கிடக்கும்போது பேசுவதற்கு வார்த்தைகள் வரவில்லை.

அவர் அமைதியாகச் சொன்னார்.

"போய்வாம்மா..."

குரல் அடைத்துக் கொண்டது

பிரேமா அவன் முன்னால் போக பின்னால் நடந்தாள். அவனுடைய சுவட்டைப் பின்பற்றி அவள் நடந்தாள். சோர்ந்து தளர்ந்து போய் அவர் தன்னுடைய இதயம் தூர விலகிப் போவதை உணர்ந்து செயலற்றுக் கண்ணீர் வழிய நிற்கிறார். அவரையும் அறியாமல் கைகளிரண்டும் மேலே உயர்ந்து அவர்களை வாழ்த்தியது.

பிரேமா படலை மட்டும் சென்று ஒருகணம் திரும்பிப் பார்த்தாள். அவர் உயர்த்திய கைகளும கண்ணீர் வழியும் கண்களுமாக நடைப்பிணமாக நின்றார் அவர் வாழ்வின் பற்றுக்கோடு பறிந்துபோகிறது. அந்தக்காட்சியை அதிகநேரம் காணச்சகியாதவன் போல் திரும்பி நடந்தாள்.

இந்தக் காட்சியைக் காண எத்தனையோ முகங்கள் தங்கள் இரண்டுகண்களை நான்காக்கிக் கொண்டு காத்திருந்து, கண்டு திருப்தியுற்றன.

மூட்டம்போட்டிருந்த வானம் திடீரென்று ஒளி பெற்றது. சூரியன் தோன்றி ஒளிபாய்ச்சினான். ஆனால் அவருடைய உள்ளம் மழைமேகம் போல் இருள் அடைந்து வானமாகி மழை போல் கண்ணீர் வடித்தார்.

பிரேமா போன மூன்றாவது நாளே திரும்பி வந்தாள் தனியாக. ஆனந்த மலரும் விழிகளுடன் சென்றவள், கலங்கிய கண்களுடன் வந்தாள். மலர்ந்த முகமும், இதயமும் கூம்பிச் சோம்பி இருந்தது. மணியம் இதனை எதிர்பார்க்கவேயில்லை. இது ஓர் பேரிடியாகவே அவர் தலையில்மட்டுமல்ல — உள்ளத்திலும் - விழுந்தது. அதிலிருந்து மீள அவருக்கு அதிக நாட்கள் தேவைப்பட்டது.

தனித்துவந்த அவளுக்கு அவருடைய உள்ளம்தான் அன்புக்கிளை பரப்பி ஆதரவு நிழல் கொடுத்தது.

— 5 —

மனதில் ஒளியாய்ப் பூத்த நினைவுகளில் நிலை மறந்திருந்த பிரேமா தன்னிலையடைந்தபோது, கண்களில் அந்தப் பத்திரிகைதான் முதலில் பட்டது. அதனை வெறுப்புடன் பார்த்தாள் அந்தவெறுப்பிடையேயும் ஏதோ ஒன்று மனதில் கருணையாய்ச் சுரந்தது.

எழுந்து சென்று அந்தப் பத்திரிகையை எடுத்தாள். அந்தத் திருமணச் செய்தியைப் பார்த்தபோது, கண்கள் கலங்கினாலும் மனம்மட்டும் சாந்தி பெற்று லேசாகியது அவர்களுடைய திருமணத்திற்கு இதே பத்திரிகை சாட்சியாய் இருக்கிறது. தன்னுடைய மணத்திற்கு எது சாட்சி எனும் கேள்வி மனதில் எழுந்தது அவளுடைய உள்ளத்தைத் தவிர உலகத்திடம் சொல்ல வேறு எதுவுமே இல்லை.

அப்போது மணியத்தார் வந்தார். அவள் கையிலிருந்த பத்திரிகையைப் பார்த்தவுடன் விஷயத்தை அவளும் அறிந்துவிட்டாளென்பதை உணர்ந்து, அவளின் அந்த நிலைக்காக வேதனைப்பட்டார்.

அவரைக் கண்டவுடன் அவளின் இதயம் பொங்கிக் குமுறியது. வெடித்துவரும் அழுகையை அடக்க முடியாமல் கோவெனக் கதறி அழுதாள் மணியம் ஆதரவுடன் அணைத்துக் கொண்டார். அவரின் அணைப்பு அவளுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

"மாமா, என் வாழ்வு முடிந்து விட்டதே... என் நம்பிக்கை பொய்யாகிவிட்டதே மாமா..."

"ஆமாம்மா... அவன் ஆண் எத்தனை முறையும் வாழலாம். ஆனால் நீ ஒருபெண். ஒருமுறை தான் வாழ்வு வரும் ... அது முடிந்து விட்டதேயம்மா..."

அவர் விக்கி விக்கிக் குழந்தைபோல் அழுதார். அவளும் அழுதாள். அதனால் முடிந்து விட்ட வாழ்வு மீண்டும் வரவா போகிறது!

(யாவும் கற்பனை)

## நாதசுர மேதை ராஜரத்தினம்பிள்ளை

என். கே. பத்மநாதன்

நாதசுர மேதை திரு. டி. என். ராஜரத்தினம் பிள்ளை மறைந்து நேற்றுடன் எட்டு வருடங்களாகிவிட்டன. அவரை நினைவு கூருமுகமாக ஈழத்தின் பிரபல நாதசுரவித்துவான் எழுதியுள்ள இக்கட்டுரையை இங்கு வெளியிடுகிறோம்.

தென்னிந்தியாவிலுள்ள தஞ்சை மாவட்டம் கர்நாடக சங்கீதத்திற்கு பெயர்பெற்றது தஞ்சையிலுள்ள காவிரித தண்ணீர் பட்டால் நல்ல சங்கீதம் வளரும் என்னும் உண்மையை சங்கீதமும்மூர்த்திகளும் இங்கு அவதரித்ததன் மூலம் உலகுக்குணர்த்தினர். தஞ்சையிலே தான் உண்மையான கர்நாடக சங்கீதம் உயர்ந்த ஸ்தானத்தைப்பெற்று வளர்ந்தது என்பதற்கு அங்கு தோன்றிய சங்கீத மேதைகளையே சான்றுக் குறிப்பிடலாம்.

வாத்தியங்களில் ராஜவாத்தியமென அனைவராலும் போற்றிப் புகழ்படும் நாதசுரம் தஞ்சையில் அவதரித்த திருவாவடுதுறை திரு டி. என். ராஜரத்தினம் பிள்ளையினால் பெருமைபெற்றது. நாதசுரத்தினால் பெருமை பெற்றவர்கள் பலர் இருக்க தனனால் நாதசுரம் பெருமை அடைந்தது என அனைவரும் உணர இசை மேதையாக விளங்கியவர் அவர். திரு ராஜரத்தினம் பிள்ளையின் நாதசுர இசையைக் கேட்டவர்கள் தன்னை மறந்திருப்பர்; இசையின் மத்திலே மூழ்கித் திளைத்து ஆராய்ந்து நல்ல இசை நுணுக்கங்களைபெறுவர் இவ்வகையில் சங்கீதத் துறையில் பண்டித, பாமர ரசிகர்களை இருபகுதியினரையும் மெய்மறந்த ஒன்றுகும் நிலையை உண்டாக்கியபெருமையும் அவரையே சார்ந்தது.

இசைநுணுக்கங்களை முறையான பாடத்திட்டங்களில் சிலைஞ்சிறு வயதிலே கற்று உணர்ந்து ஆற்றில் மிகுந்த ஆராய்ச்சி செய்து பல புதிய நுணுக்கங்களை இசை உலகத்திற்கு அறிமுகப்படுத்திய ராஜரத்தினம்பிள்ளை தமது திறமையால் திருவாவடுதுறை ஆதீன நாதசுரவித்துவானனார்.

நாதசுர வாசிப்பில் மறறவர்கள் நினைத்திருக்க முடியாத அபூர்வ சாதகம் செய்து வக்கிர, சாடவ, ஔடவ ராகங்களில் திறமையான பிரயோகங்களைச் செய்துகாட்டினார் கர்த்தா ராகங்களை வாசிக்கும் போது சுரஸ்தானங்களை சுத்தமாகவும் அதனை சமகங்களி

(2-ம் பக்கம் பார்க்க)


இப்பொழுது திரையிடப்படுகிறது
ராஜா சினிமா (சுளிபுரம்)
எம். ஜி. ஆர் - சரோஜா தேவி நடித்த
தாய் சொல்லைத் தட்டாதே

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன் 482
சிவாஜி—மாதுரிதேவி நடித்த
மனிதனும் மிருகமும்

REGAL — JAFFNA
NOW SHOWING
BOB HOPE
ANITA ERBERG
IN
PARIS HOLIDAY
(Technirama - Technicolor)


## விஞ்ஞானக் கூத்து

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தயாராயிருக்கிறது...வா, வா!..

அமுதன்: (பாடுகிறான்):

பல்லவி:

அஞ்ஞானி கையிலே
விஞ்ஞானம் சிக்கியே,
அல்லல் படுகுதையே-
அல்லல்படலாமோ?...

அநுபல்லவி

மெய்ஞான சக்தியால்
வெள்ளையர் நாடு
விழிப்புற்று எழுவ
தூண்டோ?...

சரணம்

தெய்வத்தை நெஞ்சிலும்
சைவத்தை வாழ்விலும்
சேவையைக்
கையிலும்-வைத்தே
உய்விக்கும் உண்மைகள்
ஓங்கி உலகெலாம்
ஒற்றுமையாவதென்றோ?...

"உம்... கடவுளே!...

(செல்கிறான்)

(தொடரும்)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உயர்ந்த ரகங்கள்-கண்கவர் டிசைன்களில் டக்கா, பிளேன் இன்னும் பல திணுசுகளில் தைத்தரிச் சேலைகள் விற்கப்படும் நெசவு துணி நிலையம், 32, கொழும்புத்துறை ரோட, கண்டிக்குளி 1182

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்று லேகம் இனாம். தொய்வுக்கு 15 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தா கைலாயபிள்ளையார்கோவிலடி. யாழ்ப்பாணம்.

### தேவை

எமது தயாரிப்புகளை சைக்கிளில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு ஆட்கள் தேவை. தேவன்ஸ் (ராஜா தியேட்டர் அருகாமை) யாழ்ப்பாணம். 1312

### கார் விற்பனை

E N 8000 தொடர்இலக்க மொறிஸ்மைனர் வித்தியாசமுண்டு ஐந்து ரயர், பற்றறி பெயின்ற் அப்கோல்ஸ்ரி எல்லாம் புதியவை (Show room condition) விலாசம்: 91 பெரியதெரு, யாழ்ப்பாணம். 1311

### புத்திரபாக்கியம்

பெண்களில் மலடு கிடையாது. புத்திரபாக்கியம் இல்லையே என்று கவலை இனி வேண்டாம். நூற்றுக்கணக்கானோர் என்னிடம் மருந்து சாப்பிட்டு பிள்ளையும் பெற்றிருக்கிறார்கள். பொ. செல்லையா, ஆயுர்வேத வைத்தியர், கந்தர் மடம், யாழ்ப்பாணம். 1176

2-வது மகத்தான வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (அ...)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத பக்தியை மூட்டி, தெய்வத்தின் நிலையடைந்து தமிழர் உள்ளத்தில் வாழும் - பட்டினத்தார்



பிரபல பின்னணி பாடகர்
டி. எம். சௌந்தரராஜன்
எம். ஆர். ராதா
ஜெமினி சந்திரா
எஸ். ராமராவ்
எஸ். டி. சுப்புலக்ஷ்மி
எஸ். ஆர். ஜானகி
நடித்த
பட்டினத்தார்
சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன்: கே. சோமு

பிளாஸா தேயிலை
பாவிப்பாளர்களுக்கு!
ரூபா 15,000
(283 பரிசுகள் காத்திருக்கின்றன)
போட்டியில் பங்குபெற இன்றே முந்துங்கள்.
விபரங்களுக்கு உங்கள் வியாபாரிகளைக் கேளுங்கள்.
பிளாஸா தேயிலை விலையில் மலிவானது,
தரத்திலும் குணத்திலும் உயர்வானது,
தேயிலை தரம் உருசிபார்க்கும்
நிபுணர்களால் பரிசோதித்து அடைக்கப்பட்டது.
இன்றே வாங்கிப் பருகி ஆனந்தமடையுங்கள்.

# தேர்தல் எதிரொலிகள்

## தமிழரசு சார்பில் சி. எக்ஸ். மார்ட்டின் யாழ். தொகுதியில் போட்டியிடுவார்

கொழும்பு, ஞாயிறு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதிக்கு தமிழரசுக்கட்சி சார்பில் முன்னாள் மாவட்ட நீதிபதி திரு சி எக்ஸ் மார்ட்டினை நிறுத்துவதென நேற்று கொழும்பில் கூடிய தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றத்தேர்தல் தெரிவு சபை தீர்மானித்துள்ளது

### உடுப்பிட்டி

உடுப்பிட்டித் தொகுதிக்கு, தமிழரசுக்கட்சி அபேட்சகர் பற்றி ஆராயப்பட்டபோது தற்போதைய தமிழ்க் காங்கிரஸ் எம் பி திரு எம் சிவசிதம்பரம் தமிழரசுக் கட்சியில் சேர்ந்தால் அவரை தமிழரசு கட்சிசார்பில் உடுப்பிட்டித் தொகுதிக்கு நிறுத்துவதென தீர்மானிக்கப்பட்டது

## சாவகச்சேரி தொகுதி திருச்செல்வமா? நவரத்தினமா?

கொழும்பு, சனி

சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினத்தை அடுத்த பொதுத் தேர்தலில் கிளிநொச்சித் தொகுதியில் நிறுத்துவது பற்றியும் திரு எம் திருச்செல்வத்தை சாவகச்சேரி தொகுதியில் நிறுத்துவதுபற்றியும் கொழும்பில் கூடிய தமிழரசு தேர்தல்சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது ஆனால் முடிவு எதுவும் காணப்படவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மற்றும் தொகுதிகளுக்கு தற்போதைய எம் பிக்களையே மீண்டும் நிறுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## தீவுப்பகுதியில் நேரடிப் போட்டி?

ஊர்காவற்றுறை, ஞாயிறு

எதிர்வரும் பொதுத தேர்தலில் தீவுப்பகுதித் தொகுதியில் தமிழரசு தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே நேரடிப் போட்டி நடைபெறலாம் எனத்தெரிகிறது. தமிழரசுக்கட்சி அபேட்சகராக திரு. வி நவரத்தினம் இம்முறையும் நிறுத்தப்படுவார் எனவும், தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராக புரக்டர் திரு. திரு. ஏ சி சிவஞானம் நிறுத்தப்படுவார் எனவும் கூறப்படுகிறது.

முன்னாள் பாராளுமன்ற பிரதிநிதி திரு ஏ எல் தம்பியையவும் திடீரெனத் தேர்தல் களத்தில் குதிக்கலாம் எனவும், புங்குடுதீவு புரக்டர் திரு பி கதிரவேலுவும் ஒரு அபேட்சகராக வரக்கூடுமெனவும் அரசியல்வட்டாரங்களில் பேசிககொள்ளப்படுகிறது.

## கல்முனையில்

கல்முனை, சனி

கல்முனைத் தொகுதியில் தமிழரசுக்கட்சி அபேட்சகராக திரு,மசூர் மௌலானா நிறுத்தப்படலாம். தமிழரசுக் கட்சியில் பல வருடங்களாக இருந்து தொண்டாற்றிவரும் திரு. மசூர் மௌலானாவுக்கு கல்முனையில் நல்ல சந்தர்ப்பம் இருப்பதாகக் கருதப்படுகிறது,

## தமிழ் காங்கிரஸ் சார்பில் புதிய அபேட்சகர்

கொழும்பு ஞாயிறு

சாவகச்சேரி தொகுதியில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் காங்கிரஸ் சார்பில் புதிய அபேட்சகர் ஒருவர் போட்டியிடுவார் எனத்தெரிய வருகிறது

கொடிகாமத்தைச் சேர்ந்தவரும் தற்பொழுது கொழும்பில் தொழில் புரிந்துவருமான பாரிஸ்டர் திரு, எம் சிவானந்தம், தமிழ் காங்கிரஸ் சார்பில் சாவகச்சேரி தொகுதியில் போட்டியிடுவாரெனத் தெரிய வருகிறது.

தமிழரசுக் கட்சி சார்பில் தற்போதைய எம். பி திரு வி. என். நவரத்தினமே மீண்டும் சாவகச்சேரி தொகுதியில் போட்டியிடுவாரென்றும், சாவகச்சேரி தொகுதியில் நேரடிப் போட்டியாக இருக்குமென்றும் அறியப்படுகிறது.

## மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, சனி

இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட மட்டக்களப்பு தொகுதியில் தமிழரசுக்கட்சிக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகருடன் சில சுயேச்சையாளர்களும் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மட்டக்களப்பு முதலாவது தொகுதியில் திரு இராசதுரை தமிழரசு சார்பில போட்டியிடுவார். இரண்டாவது தொகுதியில் தமிழரசுக் கட்சி எவரையும் நிறுத்தமாட்டாது என்று கூறப்படுகிறது. தேர்தல்களில் போட்டியிட இரு இளைஞர்களும் முன்வந்துள்ளனர்

## கிளிநொச்சியில் 6 பேர் போட்டி

சாவகச்சேரி, சனி

வடபகுதியில் நடைபெறும் தேர்தல்களில் கிளிநொச்சித் தொகுதியில்தான் போட்டி மிகவும் மும்முரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது இங்கு மொத்தம் ஐந்து கட்சிகள் போட்டியிட இருக்கின்றன

காங்கிரஸ் கட்சி சார்பில் முன்னாள் சாவகச்சேரி எம்.பி திரு. வி குமாரசாமியும், ஐக்கிய தமிழர் சுதந்திரக்கட்சி சார்பில் அதன் தலைவரும் தற்போதைய எம். பி. யுமான திரு. ஏ. சிவசுந்தரமும், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி சார்பில் திரு , சரவணமுத்துவும், சமசமாஜக் கட்சிசார்பில் திரு ஆனந்தசங்கரியும் போட்டியிடுவார்கள் எனத் தெரிய வருகிறது,

தமிழரசுக் கட்சி சார்பில் திரு. எம் திருச்செல்வம் அல்லது பண்டிதர் கா பொ இரத்தினம் போட்டியிடுவர் என்றும், இவர்கள் தவிர சுயேட்சை அபேட்சகர் திரு. அன்ரன் பொன்னம்பலமும் போட்டியிடுவார் எனவும் அறியப்படுகிறது:

## தபாலில் தந்திகள்

கொழும்பு, சனி

இரு மாதகாலத்தில் 28,494 தந்திகள் தபாலில் அனுப்பப்பட்டிருப்பதாக தபால் அமைச்சு அறிவித்துள்ளது.

தந்திகள் பெரும்பாலும் கேரம்கழித்து இரவில் அனுப்பப்படுவதால் தான் இப்படியான நிலைமை உருவாகிறதென்றும் இந்தத் தந்திகளை அடுத்தநாட் காலையில்தான் விநியோகிக்க முடிகிறதென்றும் தபால்பகுதி அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த அக்டோபர் மாதம் 32-ம் திகதி முதல் டிசம்பர் 4-ம் திகதிக்குள் 28,494 தந்திகள் தபாலில் அனுப்பப்பட்டன.

## விற்பனைக்கு

சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட கலப்பில்லாத 6 கிழமை கிரம்பிய அல்சேஷியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. இல. 8, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1314

## அரசாங்க ஊழியருக்கு அரசியல் உரிமை ஜனவரிக்குமுன் வழங்கப்படலாம்

கொழும்பு, சனி

அடுத்த வருடம் ஜனவரி மாதம் 15-ம் திகதிக்கு முன்னர், அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப் படலாம் என நம்பப்படுகிறது. இதுசம்பந்தமான விதிகளை திறைசேரி தயாரித்து விட்டது இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் பட்சத்தில், அரசாங்க ஊழியர்கள் உள்ளூராட்சி தாபன தேர்தல்களிலும் பாராளுமன்ற தேர்தல்களிலும் போட்டியிடலாம். அரசியல் கூட்டங்களில் பங்குபற்றவும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

## தந்தையும் மைந்தனும் மரணம் நஞ்சூட்டப்பட்டனரா?

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறையைச் சேர்ந்த கொறணாவத்தையில் தந்தையும் மகனும் உடன் மரணமடைந்ததுடன் தாயும் மகளும் அபாயகரமான நிலைமையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவமொன்று நடைபெற்றது.

இவர்கள் நால்வரும் ஆட்டிறச்சியுடன் சோறு சாப்பிட்டபோதே இச்சம்பவம்நடைபெற்றதாயும் இறைச்சிக் கறியுள் நஞ்சிடப் பட்டிருக்கலாமென்று சந்தேகிக்கப்படுகிறது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு வி பி இராசரத்தினம் இறந்தவர்களான கணபதிப்பிள்ளை (தகப்பன்), சிவநேசன் (மகன்) ஆகியோரின் மரணவிசாரணையை நடாத்தி இறைச்சிக் கறியை அரசாங்க பரிசோதகருக்கு அனுப்பும்படி உத்தரவிட்டார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தாயாகிய பூரணமும் மகள் சிவசோதியும் அபாயமான நிலைமையைத் தாண்டிவிட்டனர் எனவும் கூறப்படுகிறது.

## நாளை நடைபெறும் குத்துச்சண்டை

கொடிகாமம், ஞாயிறு

பம்பலப்பிட்டி டெட்போ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் திரு. கே. சிவசுப்பிரமணியம், நாளை இரவு பம்பலப்பிட்டி ஸ்ரேடியத்தில் நடைபெறவிருக்கும் சர்வதேச குத்துச் சண்டைப்போட்டியில் இலங்கை வீரனாகப் பங்குபற்றுவார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த திரு. சிவசுப்பிரமணியம் அண்மையில் பம்பலப்பிட்டி ஸ்ரேடியத்தில் நடைபெற்ற அகில இலங்கை குத்துச் சண்டைப் போட்டியில் சாம்பியனாகவெற்றியீட்டினார்.

நாளை நடைபெறவிருக்கும் சர்வதேச போட்டியில் பாகிஸ்தான் கோஷ்டியைச் சேர்ந்த ஒசமி அலி—சகாப்புடன் சிவசுப்பிரமணியம் மோதுகிறார். இப்போட்டியில் சிவசுப்பிரமணியம் வெற்றிபெறலாமென நம்பப்படுகிறது.

## எதிரிகள் சரணடைந்தனர்

சாவகச்சேரி, சனி

வவுனிக்குளக் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த கணேசபுரம் என்னும் இடத்தில் செல்விபுரத்தின் மனைவி கண்ணுத்தையை அடித்துக் கொலை செய்ததாகக் கிளிநொச்சிப் பொலிஸாரால் வி. கோவிந்தபிள்ளை க. கோவிந்தபிள்ளை, கே. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## மொழிப் பிரச்னை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை அமுல் நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

### 'பத்திரிகைக் கமிஷன் சிபார்சு

பத்திரிகைகளைப் பொறுப்பேற்று பத்திரிகைசபை அமைப்பது குறித்து பிரதமர் தெரிவிக்கையில், பத்திரிகைக் கமிஷன் சிபார்சுகள் அப்படியே அமுல் நடத்தப்படுமென்று உறுதியளித்தார்

### கொள்கை மாறாது

"காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்காவின் கொள்கையை அரசாங்கம் தொடர்ந்து கடைப்பிடித்துவரும் எமது கொள்கையில் மாறுதல் இருக்காது என்றும்பிரதமர் கூறினார்

'பிற்போக்குச் சக்திகள் தலைதூக்கியதனால்தான் அரசாங்கம் வீழ்ச்சியடைந்துவிட்டது. ஆனால் இந்த பிற்போக்குவாதிகளுக்கு எதிர்வரும் பொதுத தேர்தலில் மக்கள் நல்ல சாட்டையடி கொடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. விஷமத்தனமான பிரசாரங்களில் இறங்கியுள்ள இவர்கள் குறித்து மக்கள் எச்சரிக்கையாகவிருக்க வேண்டும்" என்றும் பிரதமர் கூறினார்

### சர்வாதிகாரம் துளியுமில்லை

"எதேச்சாதிகார நடவடிக்கையில் நாங்கள் இறங்கமாட்டோம் என்பதற்கு எதிர்வரும் பொதுத் தேர்தல் அறிவிப்பு நல்ல சான்றாகும் சர்வாதிகார ஆட்சி இங்கு நிலவுவதாகப் பத்திரிகைகளும் எதிர் கட்சியினரும் கூறிக்கொண்ட பொழுதிலும் சர்வாதிகாரப் போக்கு எமக்கு என்னளவும் கிடையாது உரிய முறையில் பார்லிமெண்டைக் கலைத்து ஜனநாயக முறையில் அரசாங்கத்தைத்தெரிவுசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது பிற்போக்கு சக்திகளின் வெற்றிக்கு இடமளிக்காது மக்கள் அரசாங்கத்தைத் நீங்கள் தெரிவு செய்யவேண்டும்" என்றும் பிரதமர் கூறினார்

### தடைகளை நீக்குக

"அரசாங்கத்துக்கு எதிராக பத்திரிகைகள் பிரசாரம் செய்கின்றன நாட்டின் முன்னேற்றத்துக்கு இவை தடையாக இருக்கின்றன இத்தடைகளை நீக்க ஒரு ஜனநாயக அரசாங்கத்தை தெரிவுசெய்ய வேண்டியது மக்களின முக்கிய கடமையாகும்" என்றும் பிரதமர் தெரிவித்தார்.

### நடுநிலைமைக் கொள்கை

பிரதமர் தமது பேச்சில் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை நடுநிலைமைக் கொள்கையையே தாம் தொடர்ந்து கடைப்பிடித்துவர உறுதிபூண்டுள்ளதாகவும் இந்தக் கொள்கை உலக சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதில் பக்கபலமாக அமைந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

### இன்று நடைபெறும் பொதுக் கூட்டம்

நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்துக்கு பிரதமர் தலைமைவகிப்பார் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கலந்துகொள்ளும் ஊர்வலமும் நாளை இடம் பெறவிருக்கிறது.

மார்ச் தேர்தல்

## வாக்காளர் தொகையில் 10 லட்சம் அதிகரிப்பு

கொழும்பு, சனி

அடுத்த வருடம் மார்ச் மாதம் 24-ம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் 47,09,053 பேர் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பார்களென்று தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த பொதுத் தேர்தலில் 36,00,000 பேர் வாக்களித்திருந்தனர், பொதுத் தேர்தலில் வாக்களிப்பவர்களின் தொகை இம்முறை சுமார் பதினொரு லட்சம் அதிகரித்துள்ளது. இலங்கையின் ஜனத்தொகை ஒரு கோடி பத்து லட்சமாகும்.

வாக்காளர்கள் தொகை இம்முறை அதிகரித்திருப்பதால் இதற்கான ஒழுங்குகள் செய்வதில் தேர்தல் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இம்முறை நாட்டில் 4,500 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

## சுன்னாகம் தமிழ்விழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையில் நடைபெறும் தமிழ்விழாவின் இன்றைய இறுதி நாள் நிகழ்ச்சிகள் குமாரசாமிப் புலவர் அரங்கில் திரு கு. அம்பலவாணர் தலைமையில் நடைபெறும்.

இசைநாதலயமணி பி. எஸ் ஆறுமுகம்பிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரியுடன் ஆரம்பமாகும் இன்றைய விழாவில் திருவாளர்கள் கே. சிவப்பிரகாசம், க. நாகலிங்கம், கு. அம்பலவாணர், சி தில்லைநாதன், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, அ. பெ. அருணப்பன், புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, ஜனாப் எம். ஏச். எம் அப்துல்றஸாக், இ. சிவானந்தம் ஆகியோர் சொற்பொழிவாளர்களாகக் கலந்து கொள்கிறார்கள். சுன்னாகம் சனசமூக நிலையத்தாரின் "சீதனம்" என்னும் நாடகத்துடன் இசை, நடன நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம் பெறும்.

## நிர்வாகசபை கூட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டி எம்பி திரு எம் சிவசிதம்பரத்தை உடுப்பிட்டி தொகுதிக்கு தமிழ் காங்கிரஸ் சார்பில் நிறுத்துவதா அல்லது வேறு அபேட்சகர்களை நிறுத்துவதா என்பதுபற்றியும்விசேஷ சபை முடிவு செய்யவேண்டும் என்றும் ஆலோசிக்கப்பட்டது

திரு ஜி ஜி பொன்னம்பலம் இம் மாதம் 20ம் தேதி யாழ்ப்பாணம் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நாவற்காடு கொலை வழக்கு 2 எதிரிகளுக்கு வாரண்ட்

சாவகச்சேரி, சனி

கே. இராசையா என்ற நாவற்காட்டைச் சேர்ந்த வாலிபரைக் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த க. சபாபதிபபிள்ளை, என். சின்னத்தம்பி, எம் கந்தையா, என். நல்லதம்பி, எஸ் வீரசிங்கம் முதலிய ஐவர் மீதும் சாவகச்சேரிப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் முதல் மூன்று எதிரிகளும் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ஹூபேர்ட் சில்வா முன் சரணடைந்தனர்.

தலைமறைவாகத் திரியும் மற்றைய இரு எதிரிகள் மீதும் பகிரங்க வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.